வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர் ඊළනාඩු

மாருதி
MARUTHI MONEY EXCHANGE
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 06 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 173 பக்கங்கள் : 16

# மாகாண தேர்தலில் ஒன்றிணைந்து கூட்டமைப்பாக செயல்படவேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 22

மாகாண சபைகள் தேர்தலில் ஒன்றிணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்படவேண்டும் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழலை உருவாக்காத பட்சத்தில் மக்கள் தமிழ் கட்சிகள் மீது வெறுப்படைந்து தேசிய மக்கள் சக்திக்கு மீண்டும் ஆதரவளிக்கும் நிலை ஏற்பட்டு விடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

மக்களுக்காக ஒன்றிணைந்து பயணிப்பதை தமிழ் கட்சிகள் புரிந்து கொள்ளவேண்டும் என அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

மாகாண சபைகள் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சிய மைக்குமாயின் தமிழ் கட்சிகள் தேசியம் தொடர்பில் கதைப்பதில் பிரயோசனமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஐ.நா. மனித உரிமை ஆணையர் நாளை இலங்கை வருகிறார்

## யாழ்ப்பாணம், திருமலைக்கும் பயணம்

கொழும்பு, ஜூன் 22

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரேர்க், மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை திங்கள்கிழமை இலங்கைக்கு வரவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி நாளை திங்கள்கிழமை நாட்டுக்கு வரும் அவர், 26ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் மற்றுமொரு பகுதியாக தலதா மாளிகை, யாழ்ப்பாணம், திருகோணமலைக்கும் அவர் பயணிக்கவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# செம்மணி புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டும்

## யாழில் 3 நாட்கள் அணையா விளக்கு போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி அணையா விளக்கு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் மக்கள் செயல் என்கிற தன்னார்வ

15

# செம்மணி புதைகுழியை வைத்து தமிழ்த் தரப்பு அரசியல் இலாபம்

## சரத் வீரசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 22

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியை வைத்து தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேட முயல்வதை நிறுத்தவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்தியுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் கண்டுபிடிக்கப்படும் அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும்

15

# அறிவுறுத்தல்களை மீறுவோர் கட்சியிலிருந்து இடைநிறுத்தம்

## தமிழ் அரசின் சுமந்திரன் அறிவிப்பு

அக்கரைப்பற்று, ஜூன் 22

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மீறப்படுமானால், அவர்கள் கட்சியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்படுவார்கள் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அக்கரைப்பற்றில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு, அம்பாறை மாவட்டத்தில் வெற்றியீட்டிய

15

# அரசியல்வாதிகள் உள்ளிட்ட 607 பேருக்கு எதிராக வழக்கு!

## சட்டமா அதிபர் தாக்கல் செய்தார்

கொழும்பு, ஜூன் 22

அரசியல்வாதிகள் உள்ளிட்ட 607 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில்-

இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம்

19

# வலி. வடக்கில் 2,400 ஏக்கர் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி தொடர் போராட்டம்

## நேற்று முதல் மயிலிட்டி சந்தியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வலிகாமம் வடக்கிலுள்ள 2400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரிய தொடர் போராட்டம் ஒன்று நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டிச் சந்தியில் முன்னெடுக்கப்படும்

15



# மின்சார கட்டண அதிகரிப்பால் பொருள்களின் விலையும் உயர்வு

கொழும்பு, ஜூன் 22

மின்சார கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த முடிவால், அத்தியாவசிய நுகர்வு பொருட்களின் விலைகளும் தன்னிச்சையாக உயர்த்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேவேளை, நாடு முழுவதும் அரிசி, தேங்காய், காய்கறிகள், மீன், இறைச்சி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சந்தையில் பெருமளவில் உயர்ந்துள்ளதால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் சவர்க்காரம், சலவைத்தூள், பற்பசை மற்றும் ஷம்பூ போன்ற பொருட்களின் விலைகளும் கடுமையாக அதிகரித்துள்ளன.

வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்கள் நுகர்வுப் பொருட்களை தன்னிச்சையான விலையில் விற்பனை செய்வதால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதால், அரசாங்கம் உடனடியாக தலையிட்டு

15

# புதியதொரு சோசலிச யுகத்தை உருவாக்க பயணிக்கின்றோம்!

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஜூன் 22

முதலாளித்துவத்தை இல்லாதொழித்து புதிய சோசலிச யுகத்தை உருவாக்கும் பயணத்தையே தாம் முன்னெடுத்து வருவதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற தேசிய மாணவர் வீரர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் கடந்த காலத்தில் உரிமைகளுக்காக

15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### யாழ். நல்லூர் பிரதேச சபையினர்

# காரைக்காலில் கழிவுகளை கொட்டித்தரம் பிரிக்க தடை

யாழ்ப்பாணம், ஜூன் 22

**நல்லூர் பிரதேச சபையின் திண்மக் கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையத்தின் செயல்பாட்டை உடன் நிறுத்தி, அங்குள்ள கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.**

காரைக்கால் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள குறித்த நிலையத்தால், அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மருத்துவ, இலத்திரனியல், இரசாயன, பொலித்தீன், பிளாஸ்ரிக் உள்ளிட்ட கழிவுகளை தரம் பிரிக்காமல் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இதேவேளை தாம் சுத்தமான காற்றை சுவாசிக்க முடியாமல் துர்நாற்றத்தையே சுவாசித்து வருவதாகவும் நிலத்தடி நீரை சுத்தமாக குடிக்க முடியாமலும் நிம்மதியாக உறங்க முடியாமலும் அவதிப்பட்டு வருவதாகவும் நீண்ட காலமாக தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அண்மைக் காலமாக இனம்தெரியாத நபர்கள் குறித்த கழிவுகளுக்கு இரவு வேளைகளில் தீ வைக்கும் செயல்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் ஏற்படும் தீயைக் கட்டுப்படுத்த பிரதேச சபையினர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், தீயால் ஏற்படும் புகையால் அயல் மக்கள் பெரும் துன்பங்களையும் எதிர்கொண்டு வந்தனர்.

இவ்வாறான நிலையில் இதனை ஒரு பொதுத் தொல்லையாகவும் சூழல் மாசடையக் கூடிய வகையில் காணப்படுகின்றமை தொடர்பிலும் யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், குறித்த வழக்கின்மீதான விசாரணைகளை அடுத்து, அப்பகுதியில் கழிவுகளை சேகரிக்கும் நடவடிக்கையை உடன் நிறுத்துமாறும், அங்குள்ள கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் மன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, காரைக்காலில் உள்ள கழிவு தரம் பிரிக்கும் மையத்தை அப்பகுதியிலிருந்து அகற்றி, பிறிதொரு இடத்துக்கு அதனை மாற்ற நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இனிவரும் காலங்களில் கழிவுகளை பொதுமக்கள் தரம் பிரித்தே கையளிக்க வேண்டும் எனவும் தரம் பிரிக்காத கழிவுகளை பிரதேச சபை சுகாதார தொழிலாளிகள் கையேற்க மாட்டார்கள் எனவும் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. மயூரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மண்வெட்டியால் தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 22

மண்வெட்டியால் நண்பன் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். செல்வபுரம் வடக்கு வவுனிக்குளத்தை சேர்ந்த கதிரவேல் பிள்ளை கண்ணதாசன் (வயது-56) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் அனிச்சயன் குளம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி வந்தார். இவர் பணிக்கு செல்வதற்கு முன்னர் கடந்த 10ஆம் திகதி இரவு 7 மணியளவில் தனக்கும் தனது இரண்டு நண்பர்களுக்கும் உணவு வாங்கிக்கொண்டு சென்றார்.

மூவரும் உணவருந்திய பின்னர் குறித்த நபருக்கும் அவரது நண்பர்களில் ஒருவருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் அவரது நண்பர் மண்வெட்டியால் தாக்கிவிட்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

சரணடைந்தவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்ற நட்டாங்கண்டல் பொலிஸார் இரத்த வெள்ளத்தில் மயக்கமடைந்து இருந்த குறித்த நபரை மீட்ட பொலிஸார் நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் மல்லாவி மருத்துவமனைக்கு கொண்டு சென்று, அதன் பின்னர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்று இறுதியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் அவர் உயிரிழந்தார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-05)

# "வவுனியாவில் ஆதன வரி 8 வீதமாக குறைக்கப்படும்"

வவுனியா, ஜூன் 22

வவுனியா மாநகர சபைக் குட்பட்ட குடியிருப்புக்களுக்கான ஆதன வரியை 8 சதவீதமாக குறைப்பதற்கு எதிர்பார்ப்பதுடன், குடியிருப்பை தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு 10 சதவீதமாக அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக வவுனியா மாநகர முதல்வர் சு. காண்டீபன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

மாநகரத்துக்குட்பட்ட மக்கள் தங்களது முறைப்பாடுகளை இலகுவாக வழங்குவதற்காக வட்ஸப் செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தங்களது பிரச்னைகளை குறுந்தகவல்கள் மூலமாக அனுப்பினால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

071 324 7247 என்ற இலக்கத்தின் மூலம் பொதுமக்கள் 24 மணித்தியாலமும் எம்மைத் தொடர்புகொள்ள முடியும். யூலை முதலாம் திகதி முதல் இந்த நடவடிக்கை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும். மூன்று மொழிகளிலும் குறித்த சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அத்துடன் எமது சபைக்குட்பட்ட பகுதியில் தனியான தீயணைப்பு பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளோம். இது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம். இதேபோல் அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மக்களுக்கான சிறந்த பொதுவான ஒரு பாதீட்டை இம்முறை சமர்ப்பிப்போம்.

அத்துடன் யாழ். மாநகர சபையானது குடியிருப்புகளுக்கான ஆதனவரியாக 8 சதவீதத்தை அறவிடுகின்றது. அதேபோல ஏனைய இடங்களுக்கு 10 சதவீதம் அறவிடுகின்றது, எனவே, முதற்கட்டமாக அதே தொகையை நாங்களும் அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளோம். எமது கன்னி அமர்வில் இது தொடர்பில் இறுதி செய்யப்படும்- என்றார். (எ-10)

# சர்வதேச யோகா தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்



முல்லைத்தீவு, ஜூன் 22

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவகத்துடன் இணைந்து நடத்திய சர்வதேச யோகா தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றுச் சனிக்கிழமை காலை 07.30 மணியளவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பிரார்த்தனை அரங்கில் மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (எ)

# வழுக்கையாற்றைப் புனரமைக்க ஆய்வுப் பயணம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணத்தில் வழுக்கையாற்றைப் புனரமைப்பு செய்து நிலத்தடி நீர்த் தேவை மற்றும் விவசாய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆய்வு ஒன்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்று ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாணம் வறுத்தலைவிளான் பிள்ளையார் ஆலயத்தில் ஆரம்பிக்கும் வழுக்கையாற்றில் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள், அரச திணைக்களத்தை சேர்ந்தவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



குறித்த ஆராய்ச்சி பயணத்தில் வறுத்தலைவிளான் பகுதியில் ஆரம்பிக்கும் வழுக்கையாற்று பயணம் அராலியில் முடிவடையவுள்ளது.

இதன்போது பொறியியலாளர்கள், விவசாயிகள், பொது மக்கள் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

# பாவனைக்கு உதவாத சத்துமா வழங்கிய தொண்டு நிறுவனம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் 20 சிறார்களுக்கு சத்துமா வழங்கப்பட்டது. இந்த சத்துமா யாழ்ப்பாணத்தில் உள்ள தொண்டு நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டது.

அந்த சத்துமாவை பரிசோதித்த ஒருவர் அது தரமற்ற சத்துமா எனச் சந்தேகமடைந்த நிலையில் அதனை அரிதட்டின் மூலம் அரித்தபோது அதில் புழுக்கள் தென்பட்டன.

இந்நிலையில் சிறார்களிடமிருந்து அனைத்து சத்துமா பைகளையும் பெற்றுக் கொண்ட குறித்த நபர் அதனை ஊரில் உள்ள பொது மண்டபம் ஒன்றில் வைத்தார். இதனை அறிந்த குறித்த தொண்டு நிறுவனத்தினர் அவருடன் முரண்பட்ட பின்னர் அந்த சத்துமா பொதிகளை எடுத்துச் சென்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.




இது குறித்து பொது சுகாதாரப் பரிசோதகர் மற்றும் கிராம சேவகரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாக குறித்த நபர் தெரிவித்துள்ளார். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம்

# வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் 30 பேர் வழக்கிலிருந்து விடுதலை

**மட்டக்களப்பு, ஜுன் 22**

**மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்னைக்குத் தீர்வு கோரி 2023 ஒக்ரோபர் 8ஆம் திகதி கொம்மாந்துறை பகுதியில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 30 பேருக்கு எதிராக ஏறாவூர் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் முடிவுக்கு வந்தது.**

நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன், குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

கடந்த 2023 ஒக்ரோபர் 8 அன்று, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மட்டக்களப்பு - செங்கலடி வருகையின்போது, மயிலத்தமடு மேய்ச்சல் நிலப் பிரச்னைக்குத் தீர்வு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 பேருக்கு எதிராக, வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு செய்தல், முறைகேடாக ஆட்களை தடுத்து வைத்தல் மற்றும் தேசிய வீதிச் சட்டத்தை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் ஏறாவூர் பொலிஸாரால் வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை, ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. விசாரணையின்போது, வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு மேலதிக ஆதாரங்கள் இல்லாததால், தண்டனை சட்டக்கோவையின் 186ஆவது பிரிவின் கீழ் நீதிபதிக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, வழக்கை முடிவுக்கு கொண்டுவந்து, குற்றஞ்சாட்டப்பட்ட 30 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (எ)

## பாதுகாப்பற்ற தொழில்களில் ஈடுபடும் சிறுவரை தேடி விசேட சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜுன் 22

யாசகம் மற்றும் பாதுகாப்பற்ற தொழில்களில் ஈடுபடும் சிறுவர்களை தேடி விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, யாசகம் மற்றும் பாதுகாப்பற்ற தொழில்களில் ஈடுபட்ட 21 சிறுவர்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சிறுவர்கள் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் இருக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, மத்திய கொழும்பு, நுகேகொடை, கம்பஹா, பாணந்துறை, களனி, நீர்கொழும்பு, கல்கிசை, களுத்துறை, தங்காலை, அநுராதபுரம், கண்டி, குருநாகல், சிலாபம், இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளை இலக்கு வைத்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை நாடாளாவிய ரீதியில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## 'எங்கே அந்த வழி' வீதி நாடகம்



யாழ்ப்பாணம், ஜுன் 22

யாழ்ப்பாணம், காவேரி கலா மன்றத்தின் ஏற்பாட்டில் "எங்கே அந்த வழி" என்னும் வீதி நாடகம் நேற்று முன்தினம் முத்தமிழ் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பும், அனர்த்தத்தில் இருந்து விடுபடுதலும் எனும் கருப்பொருளில் இந்த வீதி நாடகம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில், யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, காவேரி கலா மன்றத்தினர், முத்தமிழ் சனசமூக நிலையத்தினர், சிறார்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## தோட்டாவுடன் இந்தியர் கைது

கொழும்பு, ஜுன் 22

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தோட்டாவுடன் இந்திய பிரஜை ஒருவர் விமான நிலைய பொலிஸாரால் நேற்று சனிக்கிழமை காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 30 வயதுடைய இந்திய பிரஜை ஒருவர் ஆவார்.

சந்தேக நபர் குவைத்திலிருந்து நேற்று காலை 06.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலைய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியிலிருந்து ரி - 56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டா ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் குவைத்தில் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்துள்ளதாகவும் பணியில் இருக்கும்போது தரையில் விழுந்து கிடந்த தோட்டா ஒன்றை இவ்வாறு எடுத்து வந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸாரால் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## தேவையற்ற உதிரிப்பாகங்களை அகற்ற அரசு விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜுன் 22

அனுமதியின்றி வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள தேவையற்ற உதிரிப்பாகங்களை அகற்றும் விசேட நடவடிக்கை ஜுலை மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும் என வாகன போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புக்கான உபபொலிஸ் பரிசோதகர் இந்திக ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை பொலிஸ் தலைமையகத்தின் அறிவித்தலின்படி, இந்த விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த விசேட நடவடிக்கையின் போது, வாகனங்களில் அனுமதியின்றி பொருத்தப்பட்டுள்ள அதீத ஒளி விளக்குகள், அதீத ஒலிகளை வெளியிடும் ஸ்பீக்கர்கள் மற்றும் இரும்புக் கம்பிகள் போன்ற உதிரிப்பாகங்கள் அகற்றப்படும்.

இந்த தேவையற்ற உதிரிப்பாகங்கள், விபத்துகள் நேரும் போது வீதிப் பயணிகளுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன என உபபொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டில் மாத்திரம் 815 பேர், குறிப்பாக நடைபயணிகள், வீதி விபத்துகளால் உயிரிழந்தனர்.

கடந்த ஆண்டில் 18 முதல் 28 வயதுக்கிடையில் உள்ள சுமார் 800 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பின்னால் அமர்ந்திருந்தோர் உயிரிழந்தனர்.

மேலும், இந்த ஆண்டில், வீதிப் போக்குவரத்து திணைக்களம் 8,788 வாகனங்களை பொது வீதிகளில் ஓட்டத் தகுதி இல்லாதவை என அடையாளம் கண்டுள்ளது- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## யாழில் சர்வதேச யோகா தின நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜுன் 22

சர்வதேச யோகா தின சிறப்பு நிகழ்வு நேற்றைதினம் ஆயிரத்துக்கு மேற்பட்டோரின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் காலை 07:30 முதல் 08:30 மணி வரை யோகா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், யாழ். மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். மாநகர சபை ஆணையாளர் எஸ். கிருஷ்ணேந்திரன், யாழ். இந்தியத் தூதரக உயர் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (எ)

## காலாவதியான பொருட்கள் விற்பனை கடை உரிமையாளருக்கு தண்டப்பணம்

முல்லைத்தீவு, ஜுன் 22

முல்லைத்தீவு- உடையார்கட்டு பகுதியில், சுகாதார விதிமுறைகளை மீறி காலாவதியான மற்றும் சீர்கேட்டுள்ள உணவுப் பொருட்கள் விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் மற்றும் உடையார்கட்டு பகுதிகளில் உள்ள பிரபல விற்பனை நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

சோதனையின் போது காலாவதியான 73 கிராம் அடங்கிய 32 நூடில்ஸ் பைக்கற்றுகள், கச்சான் பிஸ்கட் போத்தல்கள், 2 மிக்சர் போத்தல்கள், 5 மிளகாய்த் தூள் பைக்கற்றுகள், 3 சமோசா, 11 தேயிலை பைக்கற்றுகள், 4 கிலோ ... ஒரு கிலோ மிளகு என்பன கைப்பற்றப்பட்டன.

அத்தோடு, மருத்துவச் சான்றிதழ் இல்லாமை, உணவக அனுமதிச் சான்றிதழ் இல்லாமை, முகச்சவரம் செய்யப்படாமை, குடிநீர்ப் பகுப்பாய்வு சான்றிதழ் இன்மை, குப்பைத் தொட்டி இல்லாமை, அனுமதியின்றி விற்பனை செய்தல் போன்ற சுகாதார குறைபாடுகள் பதிவாகியுள்ளன.

இவை தொடர்பில் உடையார்கட்டு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரதாஸ் மற்றும் வள்ளிபுனம் சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் ஜோய் ஆகியோர் இணைந்து மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்தனர்.

நேற்று முன்தினம் குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம், விற்பனை நிலைய உரிமையாளரை குற்றவாளியாகத் தீர்மானித்து 40,000 ரூபாய் அபராதம் விதித்து கடுமையான எச்சரிக்கையும் வழங்கியது. (எ)

## மின் வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு!

அநுராதபுரம், ஜுன் 22

அநுராதபுரத்தில் எலயாபத்துவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாணிங்கமுவ பிரதேசத்தில் உள்ள வயல் ஒன்றில் மின்சார வேலியில் சிக்கி யானை ஒன்று உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## மைத்திரியின் ஆட்சியிலும் நிதி மோசடி!

கொழும்பு, ஜுன் 22

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும், நிதி முறைகேடு தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

அவரது ஆட்சி காலத்தில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 27.5 மில்லியன் ரூபாய் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் எப்பாவல கூட்டுறவுச் சங்கத்தின் துணைத் தலைவர் பி.வி. லக்ஸ்மன் ஜெயவர்தன இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

2017ஆம் ஆண்டு, தமது சங்கத்துக்கு சொந்தமான நிலத்தில், மண்டபம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதி நிதியில் இந்த நிதி ஒதுக்கப்பட்ட போதும், இன்றுவரை அந்த திட்டம் முழுமை பெறவில்லை என்று அவர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைகளால் ஏற்படும் பிரச்னைக்கு தீர்வுகாண பொறிமுறை அவசியம்!

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, ஜூன் 22

கிராமிய பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் காட்டு யானைகளின் பிரச்னையைத் தீர்ப்பதற்கான முறையான பொறிமுறையை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

காட்டு யானை பிரச்னையைத் தீர்ப்பது குறித்து நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

காட்டு யானைகளால் ஏற்படும் பிரச்னை அதிகமாக உள்ள அநுராதபுரம், புத்தளம், பொலநறுவை, அம்பாறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, குருநாகல், பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இது தொடர்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிரச்னைகள் குறித்து மாவட்ட செயலாளர்களால் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், வனஜீவராசிகள் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்கள், வாகனத் தேவைகள் மற்றும் கடமைகளை முன்னெடுப்பதில் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன. காட்டு யானைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான பொறிமுறையை மேலும் வினைத்திறனாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, மக்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, அடுத்த மாதத்துக்குள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்தந்த மாவட்டங்களில் இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அடங்கிய குழுக்களை நியமிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்



களை இணைத்துக் கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கிய ஜனாதிபதி, இதன் துரித நடவடிக்கையாக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை குறித்த பயிற்சிகளுடன் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு இணைத்துக்கொள்வதற்கும் அதற்கான சட்டங்களை உருவாக்குமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

காட்டு யானைகளால் ஏற்படும் பிரச்னைக்குத் தீர்வு காண, பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் இணைந்து மேற்கொள்ளும் செயல்பாடுகளை முறைமைப் படுத்தவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றுமாறு ஜனாதிபதி தெரிவித்தார். (எ)

# அரசின் எதிர்காலத் திட்டத்துக்கு ஆதரவு வழங்க யுனிசெப் தயார்!



கொழும்பு, ஜூன் 22

சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்கள் மீதான வன்முறைகளைத் தடுக்க அரசாங்கம் எடுக்கும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கத் தயார் என்று யுனிசெப் தெரிவித்துள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிரான்சே உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) பிரதிநிதிகள் இடையே நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்டுள்ள திட்ட முன்மொழிவுகள் தொடர்பான எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குழுவின் அறிக்கை தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்திலிருந்து உதவி வழங்கத் தயாராக இருப்பதாக யுனிசெப் பிரதிநிதிகள் கூறினர்.

இந்தச் சந்திப்பில், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் பிரதிநிதி ஆண்ட்ரியாஸ் கர்பதி, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தயானி மெண்டிஸ் ஆகியோர் பங்கேற்றனர். (எ)

# திருட்டுடன் தொடர்புடையவர் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, ஜூன் 22

பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் போதைப்பொருளுடன் கொழும்பு, நுகேகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கொழும்பு - மிரிஹானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு, நுகேகொடை, கங்கொடவில பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் மிரிஹானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வீடுகளின் கதவுகளை உடைத்து பெறுமதியான பொருட்களை திருடுதல் உள்ளிட்ட 3 திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 02 கிராம் 250 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# இரு பேருந்துகள் மோதி விபத்து!

பதுளை, ஜூன் 22

பதுளை - ஹுனுவத்த பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

இதனால் இரு பஸ்களின் சாரதிகளுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறிருப்பினும் விபத்தினபோது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் இரு பஸ்களும் சேதமடைந்துள்ளன. விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# போலி நாணயத்தாள்களுடன் பொலிஸாரால் ஒருவர் கைது

கண்டி, ஜூன் 22

போலி நாணயத்தாள் தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையின்போது கண்டி, ஹதரலியத்த பொலிஸார் பல்வேறு விடயங்களை கண்டறிந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மதியம் ஹதரலியத்த பகுதியில் உள்ள ஒரு கடைக்குச் சென்று 5,000 ரூபாய் போலி நாணயத்தாள் ஒன்றை வழங்கிய நபர் தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் நடத்திய விசாரணையின் போது இது தெரியவந்துள்ளது.

இதன்படி, போலி நாணயத்தாள்களை வைத்திருந்த கண்டி, உடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபரிடமிருந்து மூன்று போலி 5,000 ரூபாய் நாணயத்தாள்கள், இரண்டு போலி 500 ரூபாய் நாணயத்தாள்கள் மற்றும் இரண்டு போலி 100 ரூபாய் நாணயத்தாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

மேலும், சந்தேக நபரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது, போலி 50 ரூபாய் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்ட 9 கடதாசிகள், போலி 100 ரூபாய் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்ட 4 கடதாசிகள், போலி 500 ரூபாய் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்ட 4 கடதாசிகள், போலி 5000 ரூபாய் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்ட 6 கடதாசிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

இதேவேளை, இந்த போலி நாணயத்தாள்களை அச்சிட்ட சந்தேக நபரைக் கைது செய்வதற்காக கலகெதர பகுதியில் உள்ள ஒரு நிறுவனத்துக்கு விசாரணை அதிகாரிகள் சென்றுள்ளனர்.

இருப்பினும், சந்தேக நபர் அந்த நேரத்தில் நிறுவனத்தில் இல்லை. மேலும், போலி நாணயத்தாள்கள் அச்சிடப் பயன்படுத்தப்பட்ட ஒரு கணினி மற்றும் அச்சு இயந்திரம் ஆகியவற்றை பறிமுதல் செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விவகாரம் குறித்து ஹதரலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# நாட்டில் புதிய சட்டமியற்றியேனும் கெஹலிய தண்டிக்கப்பட வேண்டும்

## சுகாதார அமைச்சர் ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தேசிய குற்றமிழைத்திருக்கிறார். நடைமுறையிலுள்ள சட்டங்கள் அவருக்கு தண்டனை வழங்குவதற்கு போதாவிட்டால், நாட்டில் புதிய சட்டமியற்றியேனும் நீதியை நிலைநாட்ட வேண்டும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கெஹலியவின் செயல்பாடுகளால் பல உயிர்கள் பறிபோயிருக்கின்றன. மருந்தின் மீதிருந்த நம்பிக்கையால் விசேட மருத்துவ நிபுணர்கள்கூட நோயாளர்களுக்கு குறித்த மருந்துகளை வழங்கியிருக்கின்றனர்.

இவர்கள் அனைவரையும் ஏமாற்றும் வகையிலேயே கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட குழுவினர் செயல்பட்டிருக்கின்றனர்.



குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய அவருக்கு விரைவில் உரிய தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார். (எ)

# போதைப்பொருட்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 22

கொழும்பில் முல்லேரியா பொலிஸ் பிரிவில் ஐஸ், ஹெரோயின் போதைப்பொருட்களுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

முல்லேரியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 204 கிராம் ஹெரோயின், 63 கிராம் ஐஸ் போதைப்பொருட்களும் போதைப்பொருள் விற்பனை மூலம் சம்பாதித்த 8 இலட்சம் ரூபாய் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
22.06.2025 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நாடக மேடையில் அரசியல்

ஈரான்மீது அமெரிக்கா தாக்குதல் தொடுத்தால் நாங்கள் கடுமையாக எதிர்ப்போம். சர்வதேச சட்டங்கள் மீறப்படுவதை வேடிக்கை பார்க்க முடியாது என்று சீனா தெரிவித்திருக்கிறது. இதே சீனா, ரஷ்ய - உக்ரைன் விடயத்தில் இவ்வாறான அறிவிப்பை மேற்கொண்டதா? இல்லையே! மாறாக, போரின் மத்தியில் ரஷ்யாவுடன் உடன்பாடு செய்து கொண்டது. தற்போது புலனாய்வு தகவல்களை பகிர்வதற்கான திறந்த உடன்பாடு ஒன்றை மேற்கொண்டிருக்கிறது.

மறுபுறம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பாகிஸ்தானின் சர்ச்சைக்குரிய இராணுவத் தளபதி முனீரை வெள்ளை மாளிகை அழைத்து விருந்து வைக்கிறார். அண்மையில், காஷ்மீர் பல்கஹாம் பகுதியில் இடம்பெற்ற பாகிஸ்தானிய ஆதரவு பயங்கரவாத அமைப்பின் தாக்குதல்களுக்கு பின்னால் முனீர் ஒரு தத்துவ ஆசிரியராக தொழிற்பட்டாரெனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி முனீரை அழைப்பதால் இந்தியா அதிருப்தியடையும் என்பது அமெரிக்காவுக்குத் தெரியும். ஆனால், இந்தியாவுடன் ஆழமான நட்பை வெளிப்படுத்திக் கொண்டே, மறுபுறம் முனீருக்கும் அமெரிக்கா விருந்தளிக்கிறது. அதேவேளை, இந்தியாவையும் இணை பிரியாத நண்பன் என்கிறார். மறுபுறம் இந்தியாவும் அமெரிக்காவுடன் நட்பு பாராட்டிக் கொண்டே ரஷ்யாவுடனும் நட்புடன் இருக்கிறது.

காசாவில் போர் குற்றங்கள் இடம்பெற்றன என்றும் அதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுதான் காரணமெனவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குற்றஞ்சாட்டியது. கூடவே, அவர் ஒரு போர குற்றவாளி என்று அறிவித்ததுடன் அவரை கைது செய்யும் பிடியாணையையும் பிறப்பித்தது. இதற்கு தென்னாபிரிக்கா ஆதரவளித்தது.

ஆனால், இதே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ரஷ்ய ஜனாதிபதி புடினையும் போர் குற்றவாளியென்று அறிவித்திருக்கிறது. கூடவே, பிடியாணையும் பிறப்பித்திருக்கிறது. ஆனால், அந்த ரஷ்ய ஜனாதிபதி புடினை அரச விருந்தாளியாக அழைத்து அவருடன் தென்னாபிரிக்க ஜனாதிபதி விருந்துண்டு மகிழ்கிறார். பெஞ்சமின் நெதன்யாகுவை போர் குற்றவாளி என்று கூறுவதை ஆதரிக்கும் தென்னாபிரிக்கா ஜனாதிபதி புடின்மீதான குற்றச்சாட்டின்போது ஆழ்ந்த அமைதி காக்கிறது.

இன்னொரு புறமோ இஸ்ரேல் பிரதமர்மீது பிடியாணை பிறப்பித்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகள்மீது அமெரிக்கா தடை வித்திருக்கிறது. இலங்கையின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை கறுப்பு பட்டியலில் இட்டது போன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீபதிகளையும் அமெரிக்கா கறுப்பு பட்டியலில் இட்டிருக்கிறது.

இவ்வாறான விடயங்களை தொகுத்து நோக்கினால் என்ன தெரிகிறது? எதைப் புரிந்து கொள்ள வேண்டும்? எந்தளவுக்கு உலக நாடக மேடையில் அரசியல் நரித்தனம் புரிந்து கொண்டிருக்கின்றது என்பதை புரிந்து கொள்ள முடிகிறதா?

இங்கு நீதி, நியாயம் என்பதெல்லாம் ஒரு விடயமே அல்ல மாறாக, அவரவர் நலன்களுக்கான ஆட்டத்தில் ஒவ்வொருவரும் தங்களுக்கான நாடகத்தை நடித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மேடையில் நீதி, நியாயம், கருணை, ஒழுக்கம் என்னும் சொற்களுடன் எவரும் இல்லை. உண்மையில், இந்த நாடாக மேடையில் இவ்வாறான சொற்களுக்கான பாத்திரங்கள் இல்லை. வேண்டுமானால் நகைச்சுவையாளர்களுக்கான சொற்களாக அவை இருக்க முடியும்.

இதனை தெளிவாகப் புரிந்து கொண்டால்தான் இன்று தமிழ்ச் சூழலில் பேசப்படும் பல்வேறு சொற்களுக்கு பின்னாலுள்ள பொய்மைகளையும் போலித்தனத்தையும் புரிந்து கொள்ள முடியும். மக்கள்தான் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் அப்போதுதான் அரசியல்வாதிகளின் ஏமாற்றுத்தனத்திலிருந்து மக்கள் தங்களை விடுவித்துக்கொள்ள முடியும்.

# அராலியில் உழவு இயந்திரம் மின்சார கம்பம் மீது மோதியது



யாழ்ப்பாணம், ஜூன் 22

அராலி மத்தி பகுதியில் உழவியந்திரம் ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டது.

வர்த்தக ஸ்தாபனம் ஒன்றின் குறித்த உழவியந்திரம் வாடிக்கையாளர் ஒருவருக்கு பொருட்களை ஏற்றிச் சென்றவேளை, வீதியால் சென்ற மாடு குறுக்கே பாய்ந்ததால் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மின் கம்பத்துடன் மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மின் கம்பம் முறிந்து உழவு இயந்திரத்தின்மீது விழுந்திருந்தாலும் சாரதி எந்தவிதமான காயங்களும் இன்றி உயிர் தப்பியுள்ளார்.

விபத்தின்போது சேதம் ஏற்பட்ட மின இணைப்பை சரி செய்யும் நடவடிக்கையை வட்டுக்கோட்டை மின்சார சபையினர் மேற்கொண்டனர். (அ-05)

# நடேஸ்வர கல்லூரி வீதி புனரமைப்பு ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 22

மறுமலர்ச்சிக்கான பாதை திட்டத்தின் கீழ், கிராமப்புற வீதிகள் மற்றும் பாலங்களுக்காக வேலை திட்டத்தின் ஒரு கட்டமாக நேற்று தெல்லிப்பழை நடேஸ்வர கல்லூரி வீதி புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 14 பில்லியன் நாடு முழுவதும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நாடு முழுவதும் ஆயிரம் கிராமப்புற சாலைகள் மற்றும் ஏராளமான பாலங்களின் கட்டுமானத்தைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ், தீவு முழுவதும் 57 கிராமப்புற சாலைகளில் பணிகள் இன்று தொடங்கும், மீதமுள்ள சாலைகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை மூன்றாம் குறுக்கு வீதி மற்றும் தெல்லிப்பழை நடேஸ்வர கல்லூரி வீதி ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

1200 மீற்றர் நீளமுள்ள நடேஸ்வர கல்லூரி வீதியை 35 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

வீதிக்கான ஆரம்ப வேலைகளை பாராளுமன்ற உறுப்பினர் பாவானந்த ராஜா ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர், பாராளுமன்ற உறுப்பினர் பவானந் தராஜா, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (அ)

# வடக்கு சுகாதார திட்டங்கள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், நிதிகளை உரிய காலத்தில் செலவு செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதியும் அதை வலியுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் சுகாதார திணைக்களம், சுதேச மருத்துவ திணைக்களம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம் ஆகிய ஒவ்வொரு திணைக்களங்களினதும் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டன. (அ)

# பஸ் - ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்து


கொழும்பு, ஜூன் 22

இரத்தினபுரி குருவிட்ட, கதன்கொட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் காண்பது அறிவு!

பவித்ரா நந்தகுமார்



குடும்பத்தினருடன் அண்மையில் வெளி மாவட்டத்துக்கு சென்ற போது இணைய இடர்பாடு ஏற்பட்டு 'கூகுள் மேப்' கைவிட்ட நிலையில், வாகனத்தை நிறுத்தி வழி கேட் டோம். ஒரு நபர் நம்பிக்கையுடன் நம்மிடம் பேசி, தீர் மானமாக ஒரு திசையை சுட்டி வழி காட்டினார். அவர் காட்டிய பாதையில் சென்று கொண்டிருந்தபோது மாற் றுப் பாதையில் வந்து விட்டோமோ என்ற சந்தேகம் எழுந்தது.

அதன் பிறகு, மற்றொரு நபரிடம் வழி கேட்டோம். முதல் நபர் சொன்ன பாதைக்கு நேர்மாறான எதிர்பாதையில் செல்லுமாறு அவர் வழிகாட்டினார். முதல் நபர் அத்தனை தீர்மானமாகச் சொன்னாரே, தற்போது யார் காட்டிய திசையில் செல்வது என்று உள்ளுக்குள் பெரும் குழப்பம். மூன்றாவது நபர் ஒருவரிடம் கேட்டுப் பார்ப்போம் என்று அவரிடம் விசாரித்ததில் இரண்டாம் நபர் சொன்ன பாதையை அவர் வழிமொழிய அந்தப் பாதையை தேர்ந்தெடுத்து பயணத்தைத் தொடர்ந்தோம்.

முதல் நபர் தவறாக வழிகாட்டியதால் நேரம் வீணாகி விட்டதே என்று கவலை கொண்டாலும் தனக்கு நூறு சதவீதம் உறுதியாக தெரியாத ஒரு தகவலை, அவர் ஏன் அத்தனை தீர்மானமாக இருந்து வழி சொன்னார் என்ற கேள்வி நீண்ட நேரம் மனதைக் குடைந்தது.

ஒரு தவறான தகவல் எத்தனை வகையான அசௌகர்யங்களை ஏற்படுத்தி விடுகின்றன! ஒரு மனிதர் மீது நம்பிக்கை ஏற்பட்டு அவர் பகிர்ந்தவை உண்மையாகத்தான் இருக்கும் என்று நம் மனம் நம்பியதே பொய்த்துப் போகும் சூழ்நிலையில், யார் சொன்னது, எவர் சொன்னது என்று சிறிதளவும் தெரியாத ஒரு தகவலை எந்த நம்பிக்கையின் அடிப்படையில் நாம் பலருக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் வலிமையாகத் தோன்றியது.

சமூக வலைதளங்கள் நம் வாழ்வில் பெரும் பங்கு வகித்துவிட்ட இந்த நவீன யுகத்தில், நம்மைத் தொடர்புகொள்ள, தகவல்களைப் பகிர, செய்திகளைத் தெரிந்துகொள்ள எனப் பல்வேறு தேவைகளை அவை பூர்த்தி செய்கின்றன எனினும், ஏராளமான தவறான தகவல்களும் கட்டுக்கதைகளான செய்திகளும் வலம் வருகின்றன. சுமார் 70 சதவீதம் அளவுக்கு தவறான தகவல்களை பலரும் பகிர்ந்து வருகின்றனர். தங்களுக்கு வந்துசேரும் ஒரு தகவல் உண்மையா, பொய்யா எனத் தெரியாமல் பலரும் தொடர்ந்து பகிர்கின்றனர். அதனால் சில நேரங்களில் நம் மீது இருக்கும் நம்பகத்தன்மைகூட கேள்விக்குறியாகும் நிலை ஏற்படுகிறது. நாம் இப்படி பொதுவெளியில் பகிரும் நம்பகமற்ற தகவல்களினால் மறைமுகமாக சில பிரச்னைகள் முளைக்கின்றன என்பதை எத்தனை பேர் உணர்ந்துள்ளனர். இவ்வறான தகவல்களால் அப்படி என்ன பாதகமான நிலை வந்துவிடப் போகிறது? படித்து விட்டு கடந்து சென்றுவிட வேண்டியது தானே என சிலர் எண்ணக்கூடும். தவறான செய்திகளையும் தகவல்களையும் அவ்வளவு எளிதில் படித்து விட்டு கடந்து சென்றுவிட முடியுமா என எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். தவறான செய்தியோ, தகவலோ அதன் பொருள் அடர்த்தி, தன்மையைப் பொருத்து தனி மனிதனின் வாழ்வில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் வல்லமை பெறுகின்றன.

பொதுவாகவே தவறான தகவல்கள், போலிச் செய்திகள் வேகமாகப் பரவும் தன்மையுடையவை. சமூக ஊடகங்கள் இந்தச் சூழலை இன்னும் இரட்டிப்பாக்குகின்றன. அசலைக் காட்டிலும் போலிக்கு வலிமை அதிகம். இப்படிப்பட்ட தவறான தகவல்கள் மனதில் இனம் புரியாத ஒரு எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் முதலில் பாதிக்கப்படுவது மன நலன்தான். தொடர்ந்து தவறான செய்திகளைப் பார்க்கும்போது மன அழுத்தம் கூடிவிடும். சில தவறான தகவல்கள் அதிர்ச்சி அளிக்கக் கூடியவையாகக் கூட இருக்கும்.

பீமன் மகனான கடோத்கஜனின் உண்மையான எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது, பிரபலமான ஒரு குளிர்பானத்தில் எய்ட்ஸ் நோயாளி ஒருவரின் ரத்தம் கலந்து விட்டது, இந்த புகைப்படத்தை பகிர்ந்தால் பேஸ்புக் நிறுவனம் தொடர்புடையவருக்கு ஒரு ரூபாய் கொடுக்கும் - அனைவருக்கும் பகிருங்கள் இந்த இணைப்பை நீங்கள் தொட்டு உள்நுழைந்தால் 4 ஜிபி இலவச டேட்டா கிடைக்கும் எனப் பல வகையான தவறான தகவல்கள்!

இது போன்ற தவறான தகவல்கள் தனி மனிதனைத் தாண்டி சமுதாயத்தை பாதிக்கக் கூடியவையாக உள்ளன. தனிப்பட்ட நபர்களைத் தாண்டி அரசியல், வணிகம், திரைப்படம் என அதன் கைகள் நீளும்போது அவற்றில் தெறிக்கும் தனிமனித வன்மம் ஆபத்தானதாக இருக்கிறது. பொய்யை ஆணித்தரமாகக் கூறி, உண்மை போன்று பலரையும் நம்ப வைக்கின்றனர். மேலும், வணிக ரீதியில் லாபம் பார்க்க இன்னொருவர் மீது வீண் அவதூறுகளைப் பரப்புகின்றனர். இப்படி திரைத்துறைக்கு அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள புதிய தலைவலி யு - டியூபர்களின் பொது விமர்சனம். இது தற்போது தீவிரமான பொது விவாதத்தின் பேசுபொருளாகியுள்ளது.

ஒரு பொருளின் பெருமையை பிரபலத்தைக் கொண்டு கூறி விளம்பரம் செய்வது வழக்கமாக உள்ளது. சில விளம்பரங்களில், 'நீங்கள் வாங்கும் இந்தப் பொருளால் எங்கோ இருக்கும் ஒரு குழந்தைக்கு உணவு கிடைக்கும் பல அநாதைப் பிள்ளைகள் பயன் பெறுவர் எனக் கூறி பொருளை விற்க முனைகின்றனர். அந்த நிறுவனம் உண்மையிலேயே அப்படி ஆதரவற்ற குழந்தைகளுக்கு லாபத்தில் உதவி செய்கிறார்களா என்று யார் சரி பார்ப்பது? காலந்தோறும் இப்படிச் சொல்லி வந்தாலும் அவர்கள் சென்று ஆதரவற்றோருக்கு உதவி செய்வது போன்ற ஒரு செய்தியை இதுவரை பார்க்க முடியவில்லை. இப்படி நம்பகத்தன்மையற்ற, வீண் பழி சுமத்துகிற, தேவையற்ற செய்திகள் நமக்கு வந்து சேர்ந்தால்கூடப் பரவாயில்லை. அடுத்தவருக்கு சேரும்படி நாம் பகிர்வது வதந்தியைப் பரப்புவதற்கு சமம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 25.05.2025 - 31.05.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - ஆனி 22
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக வீட்டு செலவுகள் அதிகரிக்கும். பின்னர், திருமகளின் கருணையால் ஓரளவுக்குப் பொருளாதார முன்னேற்றங்கள் சிறப்பாக அமைந்து மனமகிழ்ச்சி தரும். நவீன வசதிகளுடன் கூடிய புதிய இருசக்கர வாகனம் வாங்க முயற்சி எடுப்பீர்கள். பல வழிகளில் உங்களை நீங்கள் அழகுபடுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். ஓய்வின்றி, அடிக்கடி ஏற்படும் வெளியூர்ப் பயணங்கள் மூலம் அசதி ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் உங்கள் உற்றார் உறவினர் ஆகியோர், உங்கள் அசாத்திய முன்னேற்றம் கண்டு பெருமிதம் கொள்வர். எல்லாக் காரியங்களும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். அரசு மூலம் வரவேண்டிய அனைத்து பண நிலுவைகள் அதிகாரிகள் பலத்த சிபாரிசின் மூலம் கிடைத்துவிடும். வியாபாரத்தில் அதிக இலாபங்கள் உண்டாகும். நீங்கள் எதிர்பார்த்த இடங்க ளில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடமிருந்து அனுகூலமான செய்தி கள் வந்து சேரும். மகிழ்ச்சி பொங்க,

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பிறர் உங்களை புகழ வேண்டும் என்பதற்காக, கடினமான காரியங்களையும் இழுத்துப் போட்டுச் செய்வார்கள். அதேபோல் பணியிடத்தில் அதிகாரிகள் பாராட்டைப் பெறுவார்கள். காவல் துறை, இராணுவம் போன்ற சீருடைப் பணியாளர்களுக்கு சீரிய சேவைக்கான பதக்கங்கள், பாராட்டுக்கள் கிடைக்கும். விபத்துக்களை தவிர்க்க வாகனங்களை இயக்கும் போது அதிக கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இயக்கவும். மாணவர்கள் புதிய கல்லூரிகளில் சேர்ந்து,

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் மனதில் புதிய வீடு, மனை ஆகியவை வாங்கும் எண்ணம் மேலோங்கும். மனோதைரியம் ஓங்கும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும், சிலருக்கு நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த ஆதாயம் இருக்கும். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய தொடர்புகள் மூலம் நன்மையும் ஏற்படும். மாணவர்களுக்கு கல்லூரிச் சூழல்கள் புதிய அனுபவங்களைத்

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் சொத்துக்கள் சேரும், தான தர்மத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் கஷ்டமும், சுகமும் மாறி மாறி வரும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். போட்டி பந்தயங்களில் வெற்றி உண்டு. புத்தக வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு முன்னேற்றம் இருக்கும். முயற்சிகள் அரசுக் கடன் உதவியுடன் வெற்றி பெறும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரமாக அமையும். அரசு மரியாதை கிட்டும். உயர் பதவிகள் கிடைக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகளும் அதன் மூலம் வருவாய் பெருக்கமும் ஏற்படும். வியாபார சம்பந்தமான வெளிநாட்டு பயணங்களும், அதனால் ஆதாயங்களும் ஏற்பட்டு, எதிர்பா[illegible] வந்து சேரும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. பணிச் சுமை கூடும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். செல்வத் திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் மகிழ மாட்டீர்களா ? விவசாயிகளுக்கு விளைச்சல் அதிக ரித்து. இலாபமும் அதிகரிக்கும். அரசு சிபாரிசால் பல நாட்கள் தள்ளிப் போன, அதிகாரம் மிக்க பதவிக்கு பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் சிறந்த பணிக்காக மேலதிகாரிகளால் மெச்சப் படுவீர்கள். பிரச்சனைகள் வந்து சீராகிவிடும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புதுதெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமை வாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். கௌரவம், பட்டம், பதவி ஆகியவை தேடிவரும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரிப்பதால் உள்ளம் மகிழும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். அனைத்து காரியங்களிலும் சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாக மும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். தூரப் பயணங்கள் செல் லும் போது எச்சரிக்கை தேவை. உங்களுக்கு உழைப்பு அதிகமாகி.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக பல திசைகளில் இருந்தும் பணம் வரலாம். தங்கள் வாக்கு வன்மை மற்றும் சிறந்த பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். தானிய உற்பத்தி பெருகி விவசாயிகளுக்குத் தனவரவு திருப்தி அளிக்கும் வகையில் இருக் கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீணான வாக்குவாதத் தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.


### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மனைவிமார்கள் தங்கள் கணவரிடம் இருந்து உண்மைக் காதலையும், உன்னத அன்பையும் பெறுவர். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். அரசுப் பணியாளர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், புதிய பதவிகள் தேடிவரும். பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். பங்குச் சந்தையில் [illegible] முதலீடு செய்வது இழப்பைக் குறைக்கும். தொழிலில் உங்கள் கூட்டாளிகளின் [illegible] உழைப்பு மெச்சத் தக்கதாகவும், திருப்தி கரமாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தில் சுமந்திரன்! விரைவில் நாடாளுமன்றம் செல்வார்?

அ.நிக்ஸன்
- பத்திரிகையாளர்



**திம்புக்கோட்பாட்டை கஜேந்திரகுமார் முதன்மைப்படுத்துவாரா?**
**சுரேஸ் - சித்தார்த்தன் - செல்வம், நிலைப்பாடு என்ன?**
**13 தற்போதைக்கு இல்லை!**
**சகிப்புத் தன்மையோடு முன்னணி செய்த ஒப்பந்தம்!**

அநுர தலைமையிலான ஜேவிபி எனப்படும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றை தயாரிக்கவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

தயாரிப்பின்போது இனப்பிரச்னைத் தீர்வுக்குரிய ஏற்பாடுகளும் இருப்பதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

1996 ஆம் ஆண்டு சந்திரிகா அரசாங்கம் தயாரித்த நகல் வரைபுகள் மற்றும் 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கம் தயாரித்த வரைபுகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு புதிய அரசியல் யாப்புக்கான நகல் தயாரிக்கப்படவுள்ளன.

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான சட்டத்தரணிகள் குழு புதிய யாப்புக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. அநேகமாக இந்த ஆண்டு இறுதியில் பணிகள் அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி பிரதமர் தலைமையிலான ஆட்சி முறையை உருவாக்க வேண்டும் என்ற யோசனைகளும் உண்டு.

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவான மாகாண சபைகளுக்குரிய தேர்தல்களும் அடுத்த நான்கு வருடங்களுக்கு நடைபெறக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

மாகாண சபைத் தேர்தல்கள் தற்போதைக்கு அவசியமில்லை என ஜனாதிபதி அநுர கூறியதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

மாகாண சபைத் தேர்தலை மேலும் பிற்போடுதல் மற்றும் புதிய அரசியல் யாப்புக்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்தல் மாத்திரமே தற்போதைய திட்டமாகவுள்ளது.

இப் பின்புலத்தில் புதிய யாப்பு தயாரிப்பு விஷயத்தில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முழு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக நம்பத் தகுந்த தகவல்கள் கசிந்துள்ளன.

குறிப்பாக சுமந்திரன் விரைவில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார் எனவும், புதிய அரசியல் யாப்புத் தயாரிப்புக்கு அவர் ஒத்தழைப்பு வழங்குவார் என்று எதிர்பார்ப்பதாகவும், நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார சக உறுப்பினர் ஒருவரிடம் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எந்த அடிப்படையில் சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார் என்று நீதியமைச்சர் எதுவும் கூறவில்லை. ஆனால், சத்தியலிங்கம் மிக விரைவில் வெளிநாடு செல்லவுள்ளதால், அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சுமந்திரன் நியமிக்கப்படலாம் என்று தமிழரசுக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இப் பின்னணியில்தான் உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் விடயத்தில் கஜேந்திரகுமார் அணியுடன் கூட்டு சேராமல், ஈபிடிபியுடன் கூட்டுச் சேர்வதற்கான காய் நகர்த்தல் நடந்திருக்கிறது போல் தெரிகிறது.

அதேநேரம், மகிந்த ராஜபக்சவின் வேண்டுகோளின் பிரகாரமே ஈபிடிபி தமிழரசுக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்கவுள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

குறிப்பாக தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஈபிடிபியை ஆட்சி அமைக்குமாறு வலியுறுத்துமாறு, மகிந்த ராஜபக்ச மூத்த பத்திரிகை ஆசிரியர் ஒருவரிடம் கூறியதாகவும், அத் தகவலை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அந்த பத்திரிகை ஆசிரியர் தொலைபேசியில் எடுத்துச் சொன்னதாகவும் கொழும்பில் தகவல்கள் கசிந்துள்ளன.

சுமந்திரன் ஜனாதிபதி அநுரகுமாரவுடன் ஏற்கனவே நல்ல உறவில் இருக்கும் ஒருவர். அதன் காரண - காரியமாக டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபி தமிழரசுக் கட்சியுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதை மகிந்த ராஜபக்ச, கொழும்பு மைய அரசியல் நோக்கில் விரும்பியிருக்கலாம்.

சிங்கள அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை, அவர்களிடையே கட்சி அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், வடக்கு கிழக்கு ஈழத்தமிழர்களைக் கையாளும் விவகாரத்தில் ஒரு புள்ளியில் நின்று செயற்பட்டு வருகின்றனர் என்பது பொதுவான உண்மை.

அந்த அடிப்படையில் அநுரகுமார திஸாநாயக்க - சுமந்திரன் ஆகியோர் ஊடான தொடர்புகள் - காய்நகர்த்தல்கள் தனிப்பட்ட முறையில் அரசியல் ரீதியாக தமக்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணம் மகிந்த ராஜபக்சவுக்கு இல்லாமலில்லை.

கட்சி அரசியல் வேறுபாடுகள் இன்றி அரசியல் தலைவர்களுக்குரிய சட்ட உதவிகளை சுமந்திரன் கடந்த காலங்களிலும் மேற்கொண்டிருந்தார் என்ற பின்னணியில் இந்த நகர்வையும் அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையில், கஜேந்திரகுமார் மேற்கொண்ட முயற்சி, எந்தளவு தூரம் நிலையாக இருக்கும் என்ற கேள்விகள் உண்டு.

ஆனாலும், 13 பற்றிய பேச்சுக்கள் தற்போதைக்கு எழக் கூடிய நிலைமை இல்லாத ஒரு பின்னணியில், முழுமையான சுயாட்சிக் கட்டமைப்புக்கான ஏற்பாடுகளை, புதிதாக அமைத்த கூட்டின் மூலம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் உண்டு.

குறிப்பாக இன அழிப்பு பற்றிய சர்வதேச நீதிக்குரிய ஏற்பாடுகளையும் துரிதமாகக் கையாள வேண்டிய காலம் இது.

ஆகவே, கஜேந்திரகுமாரின் அடுத்த கட்ட செயல்பாடு இந்த அடிப்படையில் அமையுமா அல்லது வெறுமனே உள்ளூராட்சி சபைகளை அமைப்பதற்கான ஒரு கூட்டா என்பதை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஏனெனில், சங்கு அணி உறுப்பினர்கள் சிலரின் கடந்த கால செயற்பாடுகள் கொழும்பு மைய அரசியலுக்குள் பழக்கப்பட்டவை. 13 இல்லாவிட்டாலும், ஒற்றையாட்சியை ஏற்கும் பண்பு சங்கு அணியில் சிலரிடம் தொடர்ச்சியாக நிலவுகின்றது.

இப் பின்புலத்தில் மிக இறுக்கமான சகிப்புத் தன்மையுடன் கஜேந்திரகுமார், சங்கு அணியுடன் ஒப்பந்தம் செய்தார் என்பதை மறுப்பதற்கில்லை.

இருந்தாலும் கசப்புகள் - சகிப்புத் தன்மைகள் - நெருக்கடிகள் - கடும் விமர்சனங்கள் போன்றவற்றை கஜேந்திரகுமார் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.

2009 இற்குப் பின்னரான சூழலில் தமிழ்த் தலைமை ஒன்றிடம் இருக்க வேண்டிய பண்பு இதுதான்.

அதேநேரம், யாழ்ப்பாணத்தைக் கடந்து வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் என்ற இயங்கு நிலைக்கு கஜேந்திரகுமார் புத்துயிர் கொடுக்கவும் வேண்டும்.

சங்கு அணியுடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் காலத்துக்குப் பொருத்தம் என்று கூறினாலும், "சுயநிர்ணய உரிமை" - "இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை" என்ற பிரதான இரு உள்ளடக்கங்கள், வெறுமனே பேச்சுடன் மாத்திரம் நின்றுவிடுகின்றதா என்ற கேள்விகள் இல்லாமலில்லை.

ஆகவே, இவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டிய அல்லது மேலும் செய்து காண்பிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு கஜேந்திரகுமாருக்கு உரியது. அது இலகுவான காரியம் அல்ல.

ஆனாலும், 2009 இற்குப் பின்னர், அதாவது கடந்த பதினைந்து வருடங்களின் பின்னரான சூழலில், தேர்தல் அரசியலை இடது கையாலும் விடுதலைச் செயற்பாட்டு அரசியலை வலது கையாலும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயப் பொறுப்பு கஜேந்திரகுமாருக்கு உண்டு.

ஏனெனில், புதிய அரசியல் யாப்பு என்ற கோசத்துடன் ஈழத் தமிழர் விவகாரம் ஜெனீவா மனித உரிமைச் சபையில் இருந்து அடுத்த ஆண்டு முற்றாக நீக்கம் செய்யப்படவுள்ளதாக நம்பகமான தகவல்கள் கசிந்துள்ளன.

சிங்கள அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கட்சி அரசியலுக்கு அப்பால் ஈழத்தமிழர் விவகாரத்தை ஒரு புள்ளியில் நின்று சர்வதேச அரங்கில் கையாண்ட பயன்கள் தான் இவை.

கட்சி அரசியலைக் கடந்து தமிழர் விவகாரத்தைக் கையாள "வெளியுறவுக் கொள்கை" - "சர்வதேச இராஜதந்திர சேவை" என்ற இரு பிரதான மையங்களையும் சிங்கள தலைவர்கள் வகுத்திருக்கின்றனர். அவர்களின் பிரதான வகிபாகம் அதுதான்.

ஆகவே அரசு அற்ற சமூகம் என்ற நிலையில், "வலுவான கட்டமைப்புடன் கூடிய வெளியுறவுக் கொள்கை" - "சர்வதேச இராஜதந்திர சேவை" என்ற இரு பிரதான மையங்களைத் தமிழ்த் தரப்பு உருவாக்க வேண்டும்.

இப் பொறுப்பு கஜேந்திரகுமாருக்கு மாத்திரமல்ல, அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள அணிக்கும் உண்டு. கடந்த கால கொழும்பு மைய அரசியலை கைவிட்டு, அதாவது இலங்கை ஒற்றையாட்சிக்கு உட்பட அரசியல் வழி முறைகளில் கவனம் செலுத்தாமல், 1985 ஆம் ஆண்டு திம்புக் கோட்பாட்டு அடிப்படையிலான கட்டமைப்புக்கு வழி சமைக்க வேண்டும்.

பூட்டான் தலைநகர் திம்புவில் இடம்பெற்ற பேச்சில் விடுதலைப் புலிகள், ஈபிஆர்எல்எப். புளொட் ரெலோ உள்ளிட்ட இயக்கங்கள் பங்குபற்றியிருந்தன. அங்கு ஏற்பட்ட இணக்கத்துக்கு இந்தியாவும் ஆதரவு தெரிவித்திருந்தது.

ஆகவே சுரேஸ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் பகிரங்கமாகத் தங்கள் நிலைப்பபாட்டை அறிவிக்க வேண்டும்.

அருந்தவபாலன், ஐங்கரநேசன் ஆகியோர் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் ஏற்கனவே தமிழ்த் தேசியப் பேரவையாக ஒன்றிணைந்துள்ள பின்னணியில், இச் செயற்பாட்டை நகர்த்த முடியும் என்ற நம்பிக்கைகள் மக்களிடம் உண்டு.

அப்போதிருந்த இருதுருவ அரசியல் காலத்தில் இந்திய தரப்பால் கொண்டுவரப்பட்டதுதான் திம்புக் கோட்பாடு. இருதுருவ அரசியலைக் கையாளக்கூடிய முறையில் தமிழ்த் தரப்பும் புதுடில்லியினால் அப்போது கையாளப்பட்டிருந்தது.

ஆனால் பின்னர் அந்த அடிப்படையில் இருந்து கூட இந்தியா விலகியது. 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. திம்புக் கோட்பாட்டின் அடிப்படைகள் கூட அந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை.

இப் பின்புலத்தில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக் காலத்தில் 2003 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஐஎஸ்ஜீஏ எனப்படும் இடைக்காலத் தீர்வுத் திட்டம் ஒன்றை சமர்ப்பித்திருந்தனர்.

ஆகவே திம்புக் கோட்பாட்டையும் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தீர்வுத் திட்டத்தையும் மேலும் தரமுயர்த்தி சமகால பல்துருவ அரசியலுக்கு ஏற்ப கஜேந்திரகுமார் செய்யப்பட வேண்டும். தனது புதிய கூட்டணியை அதற்கு ஏற்ப தயார்படுத்தவும் வேண்டும்.

அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு சில புலம்பெயர் அமைப்புகளும், புலம்பெயர சமூகமும் இதற்கான ஒழுங்கமைப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

(கட்டுரையளர் கடந்த 8ம் திகதி தனது முகநூலில் எழுதியிருந்த இந்தக் கட்டுரை இப்போதும் பொருத்தமானதாக இருப்பதால் இங்கே மீள்பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலுக்கான நியமங்களை பாகுபாடான முறையில் பிரயோகிப்பதில் ஐக்கிய நாடுகள் எதிர்நோக்கும் சவால்!



கலாநிதி ஜெகான் பெரேரா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் ரேர்க் இம்மாத பிற்பகுதியில் இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயத்தை ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை தொடர்ந்து மத்திய கிழக்கில் மூண்டிருக்கும் போர் நிலைவரம் ஒளிமறைப்பு செய்துவிடக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அவரின் விஜயம் உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான 16 வருடங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தொடர்ச்சியான பல தீர்மானங்களுடன் தொடர்புடையது. அது சட்டரீதியான கடப்பாடுகளை விடவும் புவிசார் அரசியல் நலன்கள் விஞ்சிய முக்கியத்துவமுடையவையாக இருக்கும் இன்றைய சூழ்நிலையில் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கில் உள்ள முரண்பாடுகளை முனைப்பாக வெளிக்காட்டுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானங்கள் மோதல்களின் போது மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வெளிக்காட்டுகின்றன. அவை ஜெனீவா சாசனங்களாலும் அட்டூழியங்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படாமல் விடப்படக்கூடாது என்ற போருக்கு பின்னரான உலகளாவிய கருத்தொருமிப்பாலும் விளக்கமாகக் கூறப்படுகின்ற சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களின் நிலைபேறான மரபின் ஒரு பகுதியாகும்.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் விஜயம் பலம் பொருந்திய நாடுகளின் மீறல்கள் தொடர்பில் காட்டுகின்றதை விடவும் கூடுதல் அக்கறையுடன் ஐக்கிய நாடுகள் இலங்கையை சர்வதேச நியமங்களை பின்பற்ற வைப்பதில் நாட்டம் காட்டுகிறது என்ற விமர்சனங்களை கிளம்பவைக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. ஈரானிலும் காசாவிலும் இஸ்ரேல் மேற்கொள்கின்ற இராணுவ நடவடிக்கைகளுடன் (இஸ்ரேலின் இருப்புக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையில்) செல்வாக்கு மிக்க நாடுகள் இணங்கிப் போகின்றன அல்லது உண்மையில் மௌனமாக அங்கீகரிக்கின்றன போன்று தெரிகிறது. இதே போன்ற இராணுவ நடவடிக்கைகளை அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் வேறு சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து 2003 ஆம் ஆண்டில் (பேரழிவைத்தரும் ஆயுதங்களை நிர்மூலம் செய்வதற்காக என்று கூறிக்கொண்டு) ஈராக்கில் மேற்கொண்டன.


இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் இரண்டகத்தனமாக நடந்துகொள்கிறது என்பதே அதன் ஈடுபாட்டை விமர்சிப்பவர்களின் முக்கியமான வாதங்களில் ஒன்றாக இருக்கிறது. ஐக்கிய நாடுகள் பலவீனமான நாடுகளை அளவுமீறி இலக்குவைத்து சர்வதேச முறைமையை அவற்றின் மீது திணிக்கிறது என்பதும் பலம் பொருந்திய நாடுகளின் மீறல்களை கண்டும் காணாமல் விடுகிறது என்பதும் இந்த விமர்சகர்களின் நம்பிக்கையாக இருக்கிறது. ஐக்கிய நாடுகளின் அணுகுமுறைகள் உலகளாவிய மனித உரிமைகள் நியமங்களின் நம்பகத்தன்மையை மலினப்படுத்துகிறது என்பது அவர்களின் வாதம்.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் வருகை இலங்கையில் ஐக்கிய நாடுகளின் ஈடுபாட்டின் நோக்கத்தையும் நியாயப்பாட்டையும் பற்றி உள்நாட்டில் விவாதத்தை மூளவைக்கக்கூடிய சாத்தியமும் இருக்கிறது. சர்வதேச நியமங்கள் தேசிய மாற்றத்துக்கு உருப்படியான பங்களிப்பை செய்கிறதா அல்லது வெளிநாட்டு கண்காணிப்பை சமாளிப்பதற்காக, பயனுறுதியுடைய மாற்றம் எதுவும் இல்லாமல் வெறுமனே அடையாளபூர்வமான நடவடிக்கைகளாக குன்றிவிடக்கூடிய ஆபத்து இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

சர்வதேச ஈடுபாட்டை உள்நாட்டுத் தவறுகளை திருத்துவதற்கு அவசியமானவை என்று நோக்குபவர்கள் ஒரு புறத்திலும் தேசிய இறைமையை மீறும் செயல் என்று நோக்குபவர்கள் மறுபுறத்திலும் இருக்கிறார்கள். மூன்று தசாப்தகால போரின்போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் விவகாரம் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் உணர்ச்சியைக் கிளற வைப்பதாகவும் இருந்து வருகிறது. தேசிய பாதுகாப்பு என்ற போர்வையின் கீழ் தங்களது அட்டூழியங்களை நியாயப்படுத்துகின்ற ஏனைய பல நாடுகளைப் போலன்றி, இலங்கை அதன் சிக்கலானதும் வேதனைமிக்கதுமான வரலாற்று பின்புலத்தில் அதன் கடந்த காலத்தைக் கையாண்டு உதாரணத்தை வகுக்கக்கூடிய சந்தர்ப்பத்தைக் கொண்டிருக்கிறது.

பேரழிவை ஏற்படுத்திய இரு உலகப் போர்களை தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வன்முறைகளை தடுக்க இராஜதந்திரம் தவறிவிட்டது என்பதை ஏற்றுக்கொண்டு நவீன சர்வதேச முறைமை தோன்றியது. சட்டம், நிறுவன ஒத்துழைப்பு மற்றும் பல்தரப்பு ஆட்சிமுறை ஊடாக சமாதானத்தைப் பேணக்கூடிய சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சர்வதேச ஒழுங்கை நிறுவுவதற்கான கூட்டு உறுதிமொழி ஒன்றே அந்த முறைமையின் மையமாக இருந்தது. இரண்டாவது உலகப்போரின் மாபெரும் அட்டூழியங்களையும் மனித அவலங்களையும் தொடர்ந்து சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டத்தின் வளர்ச்சி மிகவும் முனைப்பானதாக அமைந்தது. அந்த நேரத்தின் வல்லாதிக்க நாடுகள் அத்தகைய பயங்கரங்களை மீண்டும் ஒருபோதும் அனுமதிக்காத புதிய உலக ஒழுங்கு ஒன்றுக்கு தலைமை தாங்குவதற்கு உறுதிபூண்டன.

அதிகாரமும் வல்லமையும் மாத்திரமே நீதியைத் தீர்மானித்த காட்டுச்சட்டம் மீண்டும் திரும்புவதற்கு எதிரான ஒரு பாதுகாப்பாக, ஐக்கிய நாடுகள், ஜெனீவா சமவாயங்கள், ஊடாக சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சர்வதேச ஒழுங்கு குறித்த நோக்கு நிறுவனமயப்படுத்தப்பட்டது. சர்வதேச நீதிமன்றம் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற சர்வதேச நீதி நிறுவனங்கள் நிறுவப்பட்டன. ஆனால், இந்த சர்வதேச முறைமை அண்மைய தசாப்தங்களில் நெருக்குதலுக்கு உள்ளாகும் போக்கு அதிகரித்தது.



**இலங்கை அதன் கடந்த காலத்தை ஒப்புக் கொண்டு கையாளுவதன் மூலம் மாத்திரமே அதன் பல்லின, பல்மதப் பண்பு பலவீனத்துக்கு அல்ல பலத்துக்கான ஒரு ஆதாரமாக மாறக்கூடிய எதிர்காலத்தை கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும்.**

அந்த முறைமை ஆரம்பத்தில் எந்த நோக்கை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டதோ அதன் அடிப்படையில் இப்போது செயற்படுவதில்லை என்பதை அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன. நடைமுறையில், ஒரு அரசின் அந்தஸ்து அல்லது வல்லமையை பொருட்படுத்தாமல் சர்வதேச சட்டம் முரண்பாடற்ற முறையில் பிரயோகிக்கப்படுவது சமரசத்துக்கு உள்ளானது. குறிப்பாக, வல்லாதிக்க நாடுகள் சட்ட நியமங்களை அவற்றின் வசதிக்கேற்ற முறையில் நடைமுறைப்படுத்துகின்ற போக்கின் விளைவாக அந்த முறைமையின் நியாயப்பாடு அருகிப்போவதுடன் சர்வதேச சட்டத்தின் கருவாக அமைந்த பொதுமை நோக்கும் கேள்விக்கு உள்ளாகிறது.

தற்போது குறைந்தது மூன்று பிரதான சர்வதேச மோதல்கள் இடம்பெறுகின்றன. உக்ரையின் போர், காசா போர், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் ஆகியவையே அவையாகும். சர்வதேச சட்ட நியமங்களை நடைமுறைப்டுத்துவதில் நிலைகுலைவு ஏற்பட்டிருப்பதை இந்த மோதல்கள் வெளிக்காட்டுகின்றன. சட்டக்கடப்பாடுகளை வெளிப்படையாகவே மதிக்காமல் செயற்படுகின்ற வல்லாதிக்க நாடுகள் சம்பந்தப்பட்ட இந்த மோதல்களைப் பொறுத்தவரை, சர்வதேச சமூகம் குறிப்பாக அதன் செல்வாக்குமிக்க உறுப்பு நாடுகள் காக்கும் மௌனம் வெளிப்படையாகத் தெரிகிறது.

தென்னாபிரிக்கா போன்ற ஒருசில நாடுகளே இந்த மோதல்களில் இடம்பெறுகின்ற சர்வதேச சட்டமீறல்கள் குறித்து பிரச்சினை கிளப்புவதில் நாட்டம் காட்டுகின்றன. பரந்தளவிலான மௌனம் அல்லது வல்லாதிக்க நாடுகள் தங்களுக்கு வசதியான முறையில் இந்த மோதல்களை கையாளுவது சர்வதேச சட்டம் அரசியல் அனுகூலத்துக்கு உட்பட்டது என்றும் அதன் அதிகாரம் புவிசார் அரசியல் மதிப்பீடுகளுக்கு கீழ்ப்படிவானதாக இருக்க முடியும் என்றும் நிலவுகின்ற எண்ணத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமைகிறது. ஈராக், லிபியா, சிரியா போன்ற வளமான நாடுகளின் பாழ்நிலை இதற்கு முன்னைய உதாரணங்களாகும்.

நம்பகத்தன்மை வாய்ந்ததும் பக்கச்சார்பு இல்லாததுமான பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறையுடன் கூடிய சர்வதேச சட்ட முறைமை ஒன்றை பேணவேண்டியதன் முக்கியத்துவத்தை இலங்கை நிலைவரம் வெளிக்காட்டி நிற்கிறது. கடுமையான போர்க்கால மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் பிரச்சினையை உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றின் ஊடாக கையாள இயலாத நாடாக இலங்கை இதுவரையில் இருந்து வந்திருக்கிறது. ஆனால், பாகுபாடான முறையில் சர்வதேச நியமங்கள் பிரயோகிக்கப்படக் கூடாது என்பதே இலங்கை அனுபவத்தில் இருந்து பெறக்கூடிய விரிவான படிப்பினையாகும்.

சிறிய அல்லது குறைந்த வல்லமை கொண்ட நாடுகள் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று உலக நிறுவனங்கள் விரும்புவதானால், அவை இஸ்ரேல், ரஷ்யா மற்றும் அமெரிக்கா உட்பட வல்லாதிக்க அரசுகளுக்கும் அதே நியமங்களை பிரயோகிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் சர்வதேச சட்ட முறைமை என்பது உலகம் பூராவும் நீதியை ஒப்புரவாக உறுதிப்படுத்துவதற்கான ஒரு அத்திபாரமாக அன்றி, பாகுபாடான முறையில் சிறிய நாடுகளை பலவந்தப்படுத்துவதற்கான கருவி என்ற எண்ணம் உருவாகக்கூடிய ஆபத்து இருக்கிறது.

சர்வதேச நடைமுறைகளில் இரண்டகத்தனமான நியமங்கள் இருக்கின்ற போதிலும், கோட்பாடுகளையும் சர்வதேச சட்ட நடைமுறைப்படுத்தலையும் ஆதரிப்பது இலங்கையின் நலன்களுக்கு உகந்ததாகும். எவ்வளவுதான் பலவீனமானதாக இருந்தாலும், சர்வதேச சட்டம் ஒன்று இருப்பது சிறிய நாடுகளைப் பொறுத்தவரை, அவை வல்லாதிக்க நாடுகளின் கொடிய நடத்தைகளுக்கு முகங்கொடுக்கும்போது சில மட்டங்களில் பாதுகாப்பை வழங்குகிறது. இந்த காரணங்களுக்காக, இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான முன்னைய கடப்பாடுகளை மதிப்பதற்கும் உறுதிமொழிகளை சாத்தியமான அளவுக்கு நடைமுறைப்படுத்துவதற்கும் தன்னாலியன்றதைச் செய்ய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் உட்பட பல்தரப்பு அரங்கங்களில் இலங்கை இந்த கடப்பாடுகளை அதன் இறைமை மற்றும் நியாயப்பாட்டை பாதுகாப்பதற்கு உதவும் ஒரு மூலோபாயச் சொத்தாக முன்னிலைப்படுத்த வேண்டும். அதே வேளை, பாகுபாடான முறையில் சர்வதேச நியமங்கள் பிரயோகிக்கப்படுவதை கேள்வி கேட்டு சவாலுக்கு உட்படுத்துவதற்கு இந்த அரங்கங்களை இலங்கை நிச்சயம் பயன்படுத்த வேண்டும்.

பலவீனமான நிலையில் உள்ள சமூகங்களை பாதுகாப்பதிலும் சர்வதேச சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த - கோட்பாடுகளைப் பின்பற்றுகின்ற ஒரு நாடாக தன்னை நிலைநிறுத்துவதிலும் இலங்கை அதன் கருத்தூன்றிய அக்கறையை வெளிப்படுத்துவதன் மூலம் சர்வதேச சட்டமும் கோட்பாடுகளும் முரண்பாடில்லாத முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற பரந்த அழைப்புக்கு உறுதியான பங்களிப்பை வழங்க முடியும்.

சர்வதேச நியமங்களுக்கு அமைவான முறையில் கடந்த காலத்தைக் கையாளுவது இலங்கையின் உள்நாட்டு நல்லிணக்கத்துக்கும் ஒருங்கிணைப்புக்கும் அவசியமானது. நிலைமாறுகால நீதிக் கோட்பாடு ( உண்மை, பொறுப்புக்கூறல், இழப்பிடு மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தம்) பொதுமையாக பிரயோகிக்கக்கூடியது மாத்திரமல்ல, போருக்கு பின்னரான எந்தவொரு சமூகத்தினதும் நீண்டகால அபிவிருத்திக்கும் முக்கியமானதாகும்.

இந்த கோட்பாடுகள் சகல பின்புலங்களிலும் காலகட்டங்களிலும் பிரயோகிக்கப்படுகின்றன. இலங்கை ஒரு ஐக்கியப்பட்ட, உறுதிப்பாடுகொண்ட , வளமான நாடாக வளர வேண்டுமானால், ( மற்றைய நாடுகள் எதைச் செய்கின்றன,எதைச் செய்யாமல் இருக்கின்றன என்பதை பொருட்படுத்தாமல்) இந்த செயன்முறையை முன்னெடுக்க வேண்டும். இலங்கை அதன் கடந்த காலத்தை ஒப்புக் கொண்டு கையாளுவதன் மூலம் மாத்திரமே அதன் பல்லின, பல்மதப் பண்பு பலவீனத்துக்கு அல்ல பலத்துக்கான ஒரு ஆதாரமாக மாறக்கூடிய எதிர்காலத்தை கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வென்றவர் தோற்றதும் தோற்றவர் வென்றதும் கோட்பாடு எதிர் இயற்கையின் நியதி

பனங்காட்டான்

> யாழ்ப்பாணத்தின் பதினேழு சபைகளிலும் ஆட்சி அமைப்போம் என்று சவால் விட்டு கோட்பாட்டு ஆதரவு கேட்டவர் ஏழு சபைகளை இழந்துள்ளார். மீசை இல்லாததால் மண் படவில்லை. பல சபைகளில் தமது கூட்டுக்கு பெரும்பான்மை இல்லாதிருந்த கஜேந்திரகுமாரின் பேரவை ஆட்சியமைத்துள்ளது. இதில் சில திருவுளச் சீட்டினால் கிடைத்தவை. இதுதான் இயற்கையின் நியதிபோலும்.

தமிழர் தாயகம் என்று போற்றப்படும் வடக்கு கிழக்கில் நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத்தேர்தல்க ளும், அவற்றுக்கான சபைகளைக் கைப்பற்றுவதும், தமிழ்த் தேசியத்தை வெல்வதற்கான போராட்டம் போன்று காட்சி கொடுக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தளவில் கடந்த பொதுத்தேர்தலில் கோட்டைவிட்ட சரிவை நிவர்த்தி செய்யவென தமிழரசுக் கட்சி பெரும் பாடுபட்டு பல சபைகளில் பல உறுப்பினர்களையும் பெற்றது அக்கட்சியின் ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

ஒருகாலத்தில் 22 எம்.பிக்களை கொண்டிருந்த தமிழ்த் தேசிய தரப்பு, தனியான தமிழரசான பின்னர் எட்டுக்கு இறங்கியுள்ளது. எனினும், வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களிலும் தமிழரசுக் கட்சி மட்டுமே எம்.பிக்களை கொண்டுள்ளது என்ற பெருமை சாத்தப்படுகிறது. தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் முதன்மையானதாகவும், கலாசார தலைநகராகவும் காலாதி காலமாக இருந்து வருகிறது. ஆனால் இங்கிருந்து ஒரேயொருவர் மட்டுமே தமிழரசு கட்சியில் வெற்றி பெற முடிந்தது என்பது மறுபக்க வரலாறு.

இதனை எழுதும்போது 1984ம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தராகவிருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவரது மணிவிழா உரையில் கூறிய ஒரு குட்டிக்கதை நினைவுக்கு வருகிறது. தமிழ்க் குடும்பங்களிடம் கிடைக்கும் சொரியல் காணிகள் பற்றிக்கூறி, அதனூடாக தமிழ் மண் பாதுகாக்கப்பட வேண்டியதை மிக நாசூக்காக வெளிப்படுத்தினார்.

'ஒருவருக்கு அவரது குடும்ப பாரம்பரியம் ஊடாக பல இடங்களில் காணிகள் இருந்தன. ஆனால் எல்லாமே காற்பரப்பு, அரைப்பரப்பு என்றே இருந்ததால் அவரால் எங்கும் ஒரு வீட்டை தமக்கென கட்ட முடியவில்லை. சொரியல் காணிகளால் எந்தப் பயனுமில்லை' என்று சுருக்கமாக ஆழமான கருத்தை துணைவேந்தர் எடுத்துரைத்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த எட்டு ஆசன வெற்றிகள் சொரியல் காணிகள் போன்றது. எந்தவொரு மாவட்டத்திலும் தனித்து ஆட்சி செலுத்தும் வல்லமை இல்லை. இதன் பிரதிபலிப்பை கடந்த மாத உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஊடாக காண முடிந்தது. இதற்கு இன்னொரு காரணமும் உண்டு.

தமிழரசுக் கட்சி இப்போது பதில் தலைவரின் கீழ் இயங்குகிறது. ஆனால் அவரின் கீழ் இரண்டு தலைமைகள் பகிரங்கமாக இயங்குகின்றன. இதனை, சிறீதரன் தமிழரசு - சுமந்திரன் தமிழரசு என்று பொதுமக்கள் அழைக்கத் தொடங்கிவிட்டனர். கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிட்டு சிறீதரன் வென்ற பின்னர் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியால் சுமந்திரன் தாமாக தமக்கொரு அணியை உருவாக்கிக் கொண்டார். பதில் தலைவரான சி.வி.கே.சிவஞானம் பல தடவை இரண்டாம் நிலை இரட்டைத் தலைமைகள் பற்றி பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற தீர்ப்பு வந்ததும் கட்சியை சீர்படுத்தி விடலாமென்ற நம்பிக்கையுடன் இவர் செயற்படுவதுபோல் தெரிகிறது. சிறீதரனை வெளியே செல்லவிடாது அணைத்துச் செல்ல வேண்டுமென்ற மனப்பாங்கு இவரிடம் காணப்பட்டாலும், சுமந்திரனின் கைகளுக்குள் இவர் சிக்கி விட்டாரென்பதுவே பெரும்பாலான பொதுமக்களின் அபிப்பிராயமாக உள்ளது. தமிழரசுக் கட்சிக்குள் கறுப்பு ஆடுகள் உள்ளன என்று இவர் அண்மையில் குறிப்பிட்டது எவரை நோக்கியது என்ற கேள்வியும் மக்கள் மன்றில் எழுந்துள்ளது.

இவ்விடயங்கள் பற்றி அவருடன் உரையாடினால் கட்சியைக் காப்பாற்ற தாம் எடுக்கும் நடவடிக்கைகள் தனிப்பட்ட வகையில் எவரையும் காப்பாற்றாது என்பதை மட்டும் இறுக்கமாகச் சொல்கிறார். காலப்போக்கில் இதனை தெரிந்து கொள்ள அவருக்கு வாய்ப்புக் கிடைத்தால் உண்மை நிலை தெரிய வரலாம்.

இன்று தமிழ் மக்களை வழிநடத்த நல்லதொரு தலைவர் இல்லை என்று அறப்பணியாளரும், சிவபூமி நிறுவனருமான செந்தமிழ் செல்வர் ஆறு.திருமுருகன் பகிரங்கமாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தெரிவித்து வருவது தாயகத்திலுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் பொதுவானது. இதன் வெளிப்பாடாக இப்போது உள்ளூராட்சிச் சபைகளை அமைப்பதில் ஏற்படும் பிச்சல் பிடுங்கல்களை பார்க்க முடிகிறது. கிளிநொச்சியில் சிறீதரன் ஒருவாறு தமது பிரதேசத்திலுள்ள மூன்று சபைகளையும் வென்று தமதாக்கி விட்டார். ஆனால், யாழ்ப்பாணத்தில் பதினேழு சபைகளையும் முழுமையாக கைப்பற்ற முடியாது தமிழரசுக் கட்சி சறுக்கிவிட்டது.

பதினேழு சபைகளிலும் நாமே ஆட்சியமைப்போம் என்று தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் அதனை ஒரு சவாலாக வீசி வந்தவர் சுமந்திரன். கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சிகள் அந்தந்த பிரதேச சபைகளை அமைக்க மற்றைய கட்சிகள் ஆதரவளிக்க வேண்டுமென்றும், இதனை ஒரு கோட்பாடு என்றும் அடிக்கடி உச்சரித்தவரும் இவரே. ஆனால், கணிசமான ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இணைந்து அவர்களுக்கு ஆட்சியில் பங்களிக்க இவர் மறுத்ததால் அவர்கள் வேறு திசை நோக்கி போய்விட்டார்கள்.

இறுதியில் மாற்றான் தோட்டத்து மாங்காய் புளிக்கும் என்றால் அதை இனிப்பாக எடுத்துக் கொள்ளலாம் என்ற போக்கில் ஸ்ரீதர் தியேட்டருக்குள் சென்று பிச்சா பாத்திரம் ஏந்தியவர்களும் இவர்கள்தான். நேற்றைய துரோகி இன்றைய நண்பன். காரியம் முடிந்தபின் அவன் மீண்டும் துரோகியாக்கப்படலாம் என்பதை தமிழினம் இன்று நிஜக்கண்களால் பார்க்கிறது.

நாற்பத்தைந்து உறுப்பினர்களைக் கொண்ட யாழ்ப்பாண மாநகர சபையில் தமிழரசுக் கட்சியின் பதின்மூன்று உறுப்பினர்கள் முப்பது வீதத்துக்கும் குறைவானவர்கள். இவர்கள் மேயர், உதவி மேயர் கதிரைகளைக் கைப்பற்ற டக்ளசின் ஈ.பி.டி.பி., ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி, சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஆதரவு வழங்கின. இவ்வாறு அந்தக் கதிரையை பெறுவதைவிட ஒதுங்கியிருந்தால் மக்கள் மதித்திருப்பார்கள்.

யாழ்ப்பாணத்தின் பதினேழு சபைகளில் ஐந்தினை கஜேந்திரகுமார் தலைமையிலான பேரவை கைப்பற்றியுள்ளது. காரைநகர் சபை சுயேட்சைக் குழுவொன்றின் வசமாகி விட்டது. விக்னேஸ்வரன் - மணிவண்ணன் கூட்டணியுடன் சேர்ந்து நல்லூரில் தலா இரண்டு வருடம் (ஐம்பதுக்கு ஐம்பது) என்ற வகையில் தமிழரசு ஒப்பந்தம் செய்து காத்திருக்க வேண்டி வந்துவிட்டது.

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையில் அநுரகுமரவின் தேசிய மக்கள் சக்தி பெற்ற ஒன்பது ஆசனங்களைத் தவிர்த்துப் பார்க்கின் தமிழரசுக் கட்சிக்கு ஆகக்கூடியதாக பதினொரு ஆசனங்கள் கிடைத்தன. ஆனால், கஜேந்திரகுமாரின் பேரவை இங்கு ஆட்சியைக் கைப்பற்றிவிட்டது. ஆரம்பத்தில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கேட்டதைக் கொடுத்திருந்தால் தமிழரசுக்கு இந்த நிலைமை வந்திருக்காது.

கிழக்கு மாகாணத்தில் வாகரை பிரதேச சபையை பிள்ளையானின் கூட்டணியும், மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச சபையை சுயேட்சைக் குழுவொன்றும் கைப்பற்றியுள்ளது. சிறையில் இருந்தவாறே பிள்ளையான் அணி வெற்றி பெற்றது தனிவரலாறு. வவுனியாவில் மட்டும் சகல தமிழர் தரப்புகளும் இணைந்து ஆட்சியமைத்து தமிழர் மானத்தைக் காப்பாற்றியுள்ளன. இங்கு தலைமைப் பதவி சங்குக் கூட்டணிக்குக் கிடைத் துள்ளது.

எத்தனை பிரச்சனைகள், எதிர்நீச்சல்கள், வாக்குத் தடுமாற்றங்கள் ஊடாக தமிழரசுக் கட்சி முதன்மை நிலையிலிருந்தும் பல சபைகளை இழந்துவிட்டது. தோல்வி அனுபவத்தைத் தரும், வெற்றி அகங்காரத்தைக் கொடுக்கும் என்ற முதுமொழியே இதற்குக் காரணம்.

கூடிய வாக்குகளைப் பெற்ற தங்களுக்கே மற்றைய கட்சிகள் ஆட்சியமைக்க ஆதரவு தரவேண்டும் என்பதை ஒருவகை எச்சரிக்கைப் பயமுறுத்தலாக சுமந்திரன் விடுத்து வந்தார். மொத்த உறுப்பினர்களில் எங்களுக்கே அதிகமானவர்கள் என்ற மனக்கணிதத்தையும் அடிக்கடி எடுத்துக் கூற தவறவில்லை. இதன்வழியாக இரண்டு முக்கிய விடயங்களை கவனிக்க முடியும்.

சுமந்திரன் கோட்பாடு என்பது இங்கு எடுபடவில்லை. உண்மையைச் சொன்னால் அது என்னவென்று பலருக்கும் புரியவே இல்லை. அதனால் எவரும் அதனையிட்டு அலட்டிக் கொள்ளவுமில்லை. தேர்தலின்போதும், தேர்தலின் முடிவின்போதும், சபைகள் அமைக்கப்படும்போதும் எல்லாம் இயற்கையின் நியதி என்று கூறிவந்த சி.வி.கே.சிவஞானம் அவர்களின் கூற்று நிரூபிக்கப்பட்டுள்ளது. திருவுளச் சீட்டின் மூலம் கஜேந்திரகுமார் அணிக்குக் கிடைத்த சில சபைகளின் வெற்றி இயற்கையின் நியதி போலும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.ஆர்.எல் எவ். தலைவர்கள் படுகொலையை தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் விளைவுகள்!



ரி. இராமகிருஷ்ணன்

சென்னையில் 1990 ஜூன் 19 ஆம் திகதி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ( ஈ.பி. ஆர்.எல்.எவ்.) பொதுச் செயலாளர் கே. பத்மநாபாவும் வேறு 14 பேரும் படுகொலை செய்யப் பட்ட சம்பவம் தமிழ்நாட்டின் சமகால அரசியல் மீது ஒரு நீடித்த தாக்கத்தைக் கொண்டிருந்தது. கோடம்பாக்கத்தில் சனசந்தடி மிகுந்த ஒரு மாடிக்குடியிருப்பில் இடம்பெற்ற அந்த தாக்குதலில் பெரும்பாலான அதன் தலைவர்கள் கொல் லப்பட்டதால் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத் துக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்பட்டது.

அந்த படுகொலைகள் பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும் தோற்றுவித்திருந்தன. அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமும் முதலமைச்சர் மு. கருணாநிதியும் கடுமையான அரசியல் தாக்குதல்களுக்கு இலக்காகவேண்டி வந்தது. அதற்கு பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், காங்கிரஸ் போன்ற கட்சிகள் தி.மு.க. அரசாங்கத்துக்கு எதிராக இடையறாது முன்னெடுத்த எதிர்ப்பிரசாரங்கள் 1991 ஜனவரியில் அந்த அரசாங்கம் கலைக்கப்படும் வரை தொடர்ந்தன. கருணாநிதியும் அவரது நிருவாகமும் பாதுகாப்பு நிலைவரத்தை கையாளுவதில் "மனவலிமையற்றதாக" இருந்ததாகவும் சட்டம், ஒழுங்கை பேண முடியாமல் இருந்ததாகவும் காரணம் கூறப்பட்டே அரசாங்கம் கலைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின முக்கியமான பகையாளி இயக்கமான ஈ.பி. ஆர்.எல்.எவ்.வினால் "1990 படுகொலைகளின் விளைவாக ஏற்பட்ட வெற்றிடத்தை ஒருபோதுமே நிரப்பக்கூடியதாக இருக்கவில்லை" என்று சுகு என்றும் அறியப்படுகின்ற அந்த இயக்கத்தின் முன்னாள் மத்திய குழு உறுப்பினரான சிறீதரன் திருநாவுக்கரசு கூறுகிறார். இயக்கம் பல்வேறு சுற்று மாற்றங்களுக்கு உள்ளானது. இலங்கையில் தற்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். வடமாகாணத்தின் சில பகுதிகளில் - யாழ்ப்பாணம், வவுனியா - மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவை கொண்டிருக்கிறது.

தி.மு.க.வுக்கு எதிரான தாக்குதல்கள் 'தி இந்து' வின் காப்பகத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் ஆவணங்களின் பிரகாரம் அன்று தி.மு.க.வுக்கு எதிரான அரசியல் தாக்குதல்களை தீவிரமாக முன்னெடுத்தவர்களில் ஒருவர் காங்கிரஸ் தலைவர் பி.சிதம்பரம். படுகொலைகள் இடம்பெற்றதற்கு மறுநாள் செய்தியாளர்கள் மாகாடொன்றில் பேசிய சிதம்பரம் ( அவர் பிறகு மத்திய நிதியமைச்சராகவும் உள்துறை அமைச்சராகவும் பதவி வகித்தார்) "தொடர்ச்சியாக மக்களை தவறாக வழி நடத்தியமைக்காக" முதலமைச்சர் மக்களிடமும் சட்டசபையிலும் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று கோரினார்.

மாநிலத்தில் விடுதலை புலிகளின் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சிகள் திரும்பத்திரும்ப எச்சரிக்கை செய்த போதிலும், அந்த இயக்கத்தின் முகாமோ அல்லது இராணுவ நடவடிக்கையோ தமிழ் நாட்டில் கிடையாது என்று முதலமைச்சர் கூறிவந்ததாக தெரிவித்த சிதம்பரம் தார்மீக அடிப்படையில் அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தி.மு.க.வை மிகவும் கடுமையாக விமர்சிப்பவராக விளங்கிய அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தி மாநிலம் படிப்படியாக "ஒரு பஞ்சாப்பாக அல்லது காஷ்மீராக" மாறிவருகிறது என்று குறிப்பிட்டார். ஆனால், இரு காங்கிரஸ் தலைவர்களும் பல வருடங்களுக்கு பிறகு கருணாநிதியின் நேச அணிகளாக மாறுவதில் எந்தவிதமான தயக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பது வேறு விடயம்.

**ஜெயலலிதாவின் நிலைப்பாடு**

தி.மு.க. அரசாங்கத்தை கண்டனம் செய்வதில் அண்ணா தி.மு.க. வின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா எந்தளவுக்கும் குறைந்தவராக இருக்கவில்லை. 1990 ஜூலையில் "தி இந்து"வுக்கு அளித்த நேர்காணல் ஒன்றில் ஜெயலலிதா படுகொலைகளை "மன்னிக்கமுடியாத ஒரு குற்றச் செயல்" என்று வர்ணித்தார். கருணாநிதி பொறுப்பை ஏற்கக்கூடிய ஒருவர் அல்ல என்பதால் அவரை பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கவேண்டும் என்று அவர் கோரினார்.

தி.மு.க.வின் ஒரு நேசக்கட்சியான இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் அரசியற்குழு "ஐக்கியப்பட்ட இலங்கை கட்டமைப்புக்குள்" தமிழ்ச் சிறுபான்மை இனத்தவர்களின் மெய்யான கோரிக்கைகளை முன்னெடுக்கும் சக்திகளை பத்மநாபா பிரதிநிதித்துவப்படுத்தி [illegible] பிட்டது. சென்னை[illegible] இடம்பெற்ற அந்த கொடூரமான கொலைகள் விடுதலை புலிகளினால் தோற்றுவிக்கப்பட்ட பாரதூரமான அச்சுறுத்தலை வெளிக்காட்டுவதாகவும் "எந்தவிதமான தடையுமின்றி அந்த இயக்கம் நாசகார நடவடிக்கைகளை தொடருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது" என்றும் அரசியறகுழு கூறியது.

படுகொலைகள் தி.மு.க. அரசாங்கத்துக்கு பாரிய அவமதிப்பு என்று பாரதிய ஜனதா கட்சியின் துணைத்தலைவர் கே. ஜனா கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார். தமிழ்நாட்டை தீவிரவாதிகள் ஒரு "திறந்த சத்திரமாக" பயன்படுத்துவதற்கு தி.மு.க. அரசாங்கம் அனுமதித்துவிட்டதாக அவர் குற்றச்சாட்டினார்.

ஆனால், படுகொலைகளை கண்டனம் செய்த கருணாநிதி பதவி விலகுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்தார். கரூரில் ஜூலை 10 ஆம் திகதி [illegible] ஒன்றில் உரையாற்றிய அவர் [illegible] தான் பதவிவிலக வேண்டும் என்று கேள்வியெழுப்பினார். "ஏன் பதவி விலகவேண்டும்? இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். நான் பதவியில் இருந்து இறங்கினால், இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படமாட்டார்களா? படுகொலைகளை அடுத்தே என்னை பதவி விலகுமாறு கேட்கப்படுகிறது. எதற்காக பத்மநாபா கொலையையும் தி.மு க.வையும் இணைத்து என்னை பதவி விலகுமாறு பிரசாரம் செய்யப்படுகிறது? சென்னை விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 40 பயணிகள் 1984 ஆகஸ்டில் கொல்லப்பட்டபோது அன்றைய பிரதமர் இந்திரா காந்தியும் தமிழ்நாட்டில் பதவியில் இருந்த முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனும் பதவி விலக முன்வந்தார்களா? என்று கருணாநிதி கேள்வி எழுப்பினார்.

"மாறுவேடத்தில் வந்தார் பதமநாபா"

"பொதுவில் தமிழ்த் தீவிரவாதிகளினாலும் குறிப்பாக, விடுதலை புலிகளினாலும் தோற்றுவிக்கப்படுகின்ற அச்சுறுத்தலை கையாளும் விடயத்தில் எந்தவிதமான அரசியல் தடங்கலும் இருக்கவில்லை" என்று சில தினங்கள் கழித்து பொலிஸ் இயக்குநர் நாயகம் (டி.ஜி.பி.) பி.துரை கூறினார். 1976 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை தமிழ் தீவிரவாத இயக்கங்கள் மத்தியிலான உட்பகை மோதல்களை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு வருகிறார்கள். 1982, 1984, 1986 ஆண்டுகளில் துப்பாக்கிச் சூடடுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன என்று கூறிய துரை தமிழ்நாடு இன்னொரு பஞ்சாப்பாக அல்லது காஷ்மீராக மாறுவதாக கூறப்படும் கருத்தை "தவறானது" என்று குறிப்பிட்டார்.

பத்மநாபா சென்னை நகருக்கான தனது வருகை குறித்து அறிவித்திருந்தால் பொலிசார் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள் என்று கருணாநிதி கூறியதாக வெளியான செய்திகள் குறித்து கருத்து தெரிவித்த துரை, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் தனது தாடியையும் அகற்றி மாறுவேடத்தில் தான் சென்னைக்கு வந்தார் என்று குறிப்பிட்டார்.

ஈ.பி.ஆர். எல்.எவ். தலைவர்களின் இறுதிச்சடங்குகளை நடத்துவதற்கு அதிகாரிகளும் எவ்வாறு உதவினார்கள் என்பதை சிறீதரன் திருநாவுக்கரசு நினைவுபடுத்துகிறார். முதலில் வெளிநாட்டு பிரஜைகளின் பூதவுடல்கள் அரசாங்க எஸ்டேட்டில் உள்ள ராஜாஜி மண்டபத்துக்கு அண்மையாக மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்களுக்கு இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தந்த தார்மீக மற்றும் உணர்வுபூர்வமான ஆதரவு பெரிதும் நினைவுகூரத்தக்கது என்று அவர் கூறினார்.

ஒரு வருடத்திற்குள் மாநிலத்தில் அதுவும் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் இன்னொரு அதிர்ச்சிகரமான சம்பவம் இடம்பெற்றது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு பொலிஸ் சுப்பிரிண்டன் உட்பட 15 பேருடன் சேர்த்துக் கொல்லப்பட்டார்.

( தி இந்து )



ஈ.பி.ஆர். எல்.எவ். தலைவர்களின் இறுதிச்சடங்குகளை நடத்துவதற்கு அதிகாரிகளும் எவ்வாறு உதவினார்கள் என்பதை சிறீதரன் திருநாவுக்கரசு நினைவுபடுத்துகிறார். முதலில் வெளிநாட்டு பிரஜைகளின் பூதவுடல்கள் அரசாங்க எஸ்டேட்டில் உள்ள ராஜாஜி மண்டபத்துக்கு அண்மையாக மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரான தமிழ்க் கட்சிகளின் வரவு-செலவுக் கணக்கு

கந்தையா அருந்தவபாலன்

கடந்த இரு மாதங்களாக களை கட்டியிருந்த உள்ளூராட்சித் தேரதல் திருவிழா இந்த வாரத்துடன் நிறைவுக்கு வருகிறது. இத்திருவிழாவின் பிரதான உபயகாரர்களான அரசியல் கட்சிகளின் தேர்தலுக்கு முன்னரான நிலைப்பாட்டுக்கும் தேர்தலுக்குப் பின்னரான நிலைப்பாட்டுக்கும் இடையில் எதிர்பாராத திருப்பங்களும் மாற்றங்களும அரங்கேறிவருவதை அவதானிக்க முடிகிறது. சபைகளின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான கோரிக்கைகள், புதிய கூட்டுகள், விட்டுக் கொடுப்புகள், இராஜதந்திர முலாம் பூசப்பட்ட சதிகள், குழிபறிப்புகள், சச்சரவுகள் என அரசியல் அரங்கில் பல சுவாரசியமான காட்சிகள் வந்து மறைகின்றன. தேர்தலுக்கு முன்னர் துரோகிகள், ஒட்டுக்குழுக்கள், அரசின் கைக்கூலிகளாக இருந்தவர்கள் இப்போது நண்பர்களாக மாறிவிட்டனர். நண்பர்களாக இருந்தவர்கள் துரோகிகளாகி விட்டனர். எதிரெதிராக இருந்த பலர் இன்று ஒன்றாகிவிட்டனர். இன்றும் எதிரெதிராக இருப்பவர்கள் சில இடங்களில் ஒன்றுபடுகின்றனர். இவையெல்லாவற்றுக்கும் நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றன. 'அரசியலில் இதுவெல்லாம் சகஜமப்பா' என பொதுமக்கள் இவற்றைக் கடந்து செல்ல நினைக்கின்றனர்.

எனினும் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட இம்மாற்றங்கள் அவற்றின் அரசியல் கணக்கறிக்கையில் புதிய வரவு, செலவுப் பதிவுகளைத் தோற்றுவித்துள்ளன. இங்கு வரவு செலவு என்பது வருமானம் செலவீடு பற்றியதல்ல. கட்சிகளுக்கான வாய்ப்புகளும் இழப்புகளும் பற்றியதாகும். சில கட்சிகளுக்கு வரவுப்பக்கத்தில் அதிக பதிவுகளும் வேறு சில கட்சிகளுக்கு செலவுப் பக்கத்தில் அதிக பதிவுகளும் இடம்பெற்றிருப்பது போலத் தென்படுகிறது. எவ்வாறாயினும் இப்புதிய பதிவுகள் அக்கட்சிகளின் எதிர்கால அரசியல் வர்த்தகத்தில் கணிசமான மாற்றங்களையும் திருப்பங்களையும் ஏற்படுத்தும் என உறுதியாகக் கூறமுடியும். அரசியலில் ஒரு கட்சியின் இழப்பு என்பது அதன் எதிராளிகளுக்கான வாய்ப்பாக மாறும். அதனால் அரசியல் கணக்கறிக்கையில் புதிய பதிவுகளின் உடனடியான இறுதி மீதியைவிட எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மீதிகளே கட்சிகளுக்கு முக்கியமானதாக இருக்கும்.

தேர்தலுக்குப் பின்னரான கொடுக்கல் வாங்கல்களில் செலவுகள் அதிகரித்து கூடியளவு நட்டத்தை நிகழ்காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் அனுபவிக்கப் போகும் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சி இருக்கும் போல் தெரிகிறது. இக்கட்சி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் உடன்பாடு காணுவதில் காட்டிய அசட்டையீனமும் தாமதமும் அதற்கு அதிகளவு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இக்கட்சி சில விட்டுக் கொடுப்புகளுடன் அக்கூட்டணியுடன் உடன்பாடொன்றை எட்டியிருக்குமானால் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துச் சபைகளிலும் தனது அதிகாரத்தைப் பெற்றிருக்க முடியும். அது அக்கட்சிக்கு நிகழ்காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் தனக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்த உதவியிருக்கும் என்பதற்கப்பால் கட்சியில் சுமந்திரனது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்த உதவியிருக்கும்.

உடன்பாடு காணத்வறியதால் இந்த நட்டம் ஏற்பட்டது போல் ஈ.பி.டி.பி யுடன் உடன்பாடு கண்டதால் தேறிய ரீதியில் இன்னொரு நட்டமும் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. ஈ.பி.டி.பியுடன் உடன்பாடு காணப்பட்டதால் யாழ் மாநகரசபை உட்பட சிலசபைகளின் அதிகாரத்தை அக்கட்சி கைப்பற்றியமை அதற்கு முக்கியமான ஒரு வரவாக இருந்தாலும் அக்கட்சியின் நன்மதிப்பில் பாரிய அழிவை அது உருவாக்கிவிட்டது. அதுவும் சில சபைகளின் அதிகாரத்தைப் பெறுவதற்காக கடந்தகாலக் கொலைக்களமாக்க் கருதப்படும் சிறீதர் தியேட்டருக்குச் சென்று அதன் கதவைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய பதில் தலைவர் தட்டியதை அக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களால் மட்டுமன்றி அதிகளவில் பொதுமக்களாலும் வரவேற்கப்படவில்லை. ஜ.த.தே. கூட்டணியுடன் உடன்பாடு காணத் தவறியமையால் சில சபைகளின் அதிகாரத்தை அநியாயமாக இழக்க நேர்ந்ததால் தலைமை மீது கட்சி உறுப்பினர்கள் பலர் அதிருப்தி அடைந்திருக்கும் ஒரு நிலையில் டக்ளஸிடம் மண்டியிட்டது மேலும் அவர்களிடத்து வெறுப்பைத் தோற்றுவித்துள்ளதைக் காண முடிகிறது. இவை ஏலவே வெடிப்புற்றிருக்கும் அக்கட்சியை மேலும் பலவீனப்படுத்தும் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. இதனால் தனது கட்சி உறுப்பினர்களை பகிரங்கமாகவே எச்சரிக்கும் ஒரு நிலைக்குச் சுமந்திரனைத் தள்ளியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. அவ்வாறான எச்சரிக்கையையும் மதிக்காத ஒரு நிலை ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவில் வெளிப்பட்டதையும் காணக்கூடியதாக உள்ளது. மேலும் தமிழரசிக்கட்சியின் வசமாகியுள்ள சபைகளின் தவிசாளர்களாக சுமந்திரனின் விசுவாசிகளே தெரிவாகியுள்ளனர். இவர்களில் பலர் முன்னைய பதவிக்காலத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டவர்கள் என்பதுடன் தனிமனித ஒழுக்கம் தொடர்பாகவும் பல சந்தர்ப்பங்களில் விமர்சிக்கப்பட்வர்களாக உள்ளனர். சுமந்திரனின் மீதான மதிப்பு அவரால் குறைவதைவிட அவரைச் சுற்றியிருப்பவர்களாலேயே அதிகம் பாதிப்புக்குள்ளாகிறது என்ற அபிப்பிராயமும் மக்களிடத்தில் இருந்து வருகிறது. இவ்வாறான நிலைமைகள் கட்சிக்குள் சுமந்திரனுக்கு எதிரான தரப்பைப் பலப்படுத்தினாலும்கூட அதுவும் கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கே வழிவகுக்கும்.

தமிழ்த் தேசிய பேரவை அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பவற்றுக்கான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைப் பொறுத்தவரை அதன் அரசியல் கணக்கில் நிகழ்காலத்தில் வரவுப்பதிவுகளே உயர்வாக உள்ளதை அவதானிக்க முடிகிறது. தேர்தலுக்கு முன்னராக சில அரசியல் தலைவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு, தேர்தலுக்குப் பின் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு இரண்டுமே இதுவரை அக்கட்சிக்குச் சாதகமாகவே காணப்படுகிறது. தேர்தலுக்கு முன்னரான புரிந்துணர்வு தேர்தலில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை பரவலாக ஏற்படுத்தத் தவறவில்லை. வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபை போன்றவற்றில் இதனைக் காணமுடிகிறது. வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையால் நல்லூர் பிரதேச சபையை இக்கட்சிக்குக் கிடைக்கக் கூடிய இதுபோன்ற வாய்ப்பு கைநழுவிப் போய்விட்டது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுனான உடன்பாட்டினால் யாழ் மாவட்டத்தில் கணிசமான சபைகளின் அதிகாரத்தை அக்கட்சி பெறக்கூடியதாக இருந்தது. இது அக்கட்சியின் வரவுப்பக்கத்தை உயர்த்திய அதேவேளை இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செலவுப்பக்கத்தில் அதேயளவு பதிவை ஏற்படுத்திவிட்டது. ஆனால் மறுபுறத்தில் அக்கூட்டணியுடனான உடன்பாடு தமிழ்த் தேசிய முன்னணிக்குக் கணிசமான சேதாரத்தையும் ஏற்படுத்தத் தவறவில்லை.

இதுவரை அக்கட்சியினால் மிகமோசமாக விமர்சிக்கப்பட்ட தரப்புகளுடன் செங்குத்தாக இறங்கி ஒரே மேசையில் உட்காரந்திருந்ததை அக்கட்சியின் தீவிர ஆதரவாளர் பலரினால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் கட்சியிலிருந்து விலகவில்லை என்றாலும் சற்றுத் தூரத்தில் சென்றுவிட்டார்கள் என்பது உண்மையானது. உறுப்பினர் சிலரிடம் இவ்வாறான விரக்தி நிலை ஏற்பட்டாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை பரவலாக வரவேற்கப்படும் ஒன்றாகவே காணப்படுகிறது. இத்தகைய அரசியல் கூட்டை ஏற்படுத்திக் கொண்டதனால் அதிகளவு விமர்சனங்களுக்கும் மதிப்பிறக்கத்துக்கும் உள்ளானவர் கஜேந்திரகுமார் தான். அவ்வாறு நடக்கும் என்பதைத் தெரிந்துகொண்டே அவர் அத்தகைய முயற்சியை முன்னெடுத்தார் என்பதே உண்மை. அம்முயற்சியின் பின்னாலுள்ள நியாயங்கள், நோக்கம், விளைவுகளைப் புரிந்து கொள்வதற்கு இன்னுஞ் சிறிது காலம் பொறுக்கவேண்டியிருக்கிறது. அது மட்டுமன்றி இதன்மூலம் எதிர்பார்க்கும் நோக்கங்களை அடைவதில் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணித் தலைவர்களுக்குப் பெரும் பொறுப்பு உள்ளது. அதை மறந்து குறுகிய விருப்பங்களுக்கு அவர்கள் வழமைபோலச் சலனப்படுவார்களேயானால் தமது கண்க்கிலும் கஜேந்திரகுமாரின் கணக்கிலும் மட்டுமல்ல ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்களின் அரசியல் கணக்கிலும்அது பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் அரசியல் கணக்கிலும் வரவுகள்தான் அதிகம். அக்கூட்டணியைப் பொறுத்தவரை ஏனைய முன்னிலைக் கட்சிகளைச் சார்ந்து நின்றே தனது அரசியலை முன்னெடுக்க வேண்டிய நிலைமை இதுவரை இருந்து வருகிறது. அதன்காரணமாகவே அக்கூட்டணி இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து சபைகளின் அதிகாரத்தைப் பங்கிட விரும்பியது. அது கைகூடாத நிலையில் காங்கிரஸுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டது. அதனால் அதன் வரவுப்பக்கத்தில் அபரிதமான உயர்வே தற்போது தென்படுகிறது. ஓரிரு சபைகளில் தவிசாளர் பதவியும் ஏனையவற்றில் உப தவிசாளர் பதவியும் அதன் வரவில் சேர்ந்துள்ளதைக் காணலாம். எனினும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பொறுத்தவரை தற்போதைய உறவைவிட கைநழுவிப்போன தமிழரசுக் கட்சியுடனான உறவு எதிர்காலத்தில் அதிக வாய்ப்பைத் தரக்கூடியதாக இருக்கும் எனக்கருதப்படும் ஒருநிலை அக்கூட்டணியின் ஒரு தரப்பிடம் இன்னும் இருந்து வருகிறது என்பதை மறுக்க முடியாது.



ஜ.த.தே.கூட்டணியுடன் தமிழரசு கட்சி உடன்பாடு காணத் தவறியமையால் சில சபைகளின் அதிகாரத்தை அநியாயமாக இழக்க நேர்ந்ததால் தலைமை மீது கட்சி உறுப்பினர்கள் பலர் அதிருப்தி அடைந்திருக்கும் ஒரு நிலையில் டக்ளஸிடம் மண்டியிட்டது மேலும் அவர்களிடத்து வெறுப்பைத் தோற்றுவித்துள்ளதைக் காண முடிகிறது.


டக்ளஸின் ஈ.பி.டி.பி கட்சியைப் பொறுத்து எந்தவொரு சபையிலும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலையில் இல்லை. ஊர்காவற்றுறையில் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் உறுதியான நிலையை ஏற்படுத்துவது கடினமே. அதனால்தான் எந்தவொரு சபையிலும் அதிகாரத்தைப் பெறத் தான் முயலப் போவதில்லை என்பதை தொடக்கத்திலேயே டக்ளஸ் வெளிப்படுத்தியிருந்தார். டக்ளஸ் போன்ற அரச ஆதரவுக்கட்சியின் நிலைபேறுக்கான ஆதாரங்கள் இரண்டுதான். ஒன்று அதிகாரம். இரண்டு அரச வளங்கள். இந்த இரண்டுமே இல்லாதவிடத்து இன்று போய் நாளை வா எனக் கூறிய இராமன் முன்னின்ற இராவணன் நிலைதான் அவருக்கு. ஆனாலும் இந்த நிலையிலும் தனது அரசியல் கணக்கில் எதிர்பாராத வரவை டக்ளஸ் ஏற்படுத்தியுள்ளார். சித்தார்த்தனுடனான பேச்சுவார்த்தைக்கு அவரது வீட்டுக்கு தான் வருவதாகக் கூறிய டக்ளஸ் சிவஞானத்தை சிறீதர் தியேட்டருக்குத் தன்னிடம் வரவைத்ததன் மூலமும், பல சபைகளில் தமிழரசுக்கட்சி அதிகாரத்தைப் பெறுவதற்குத் தீர்மானிக்கும் சக்தியாக மாறியதன் மூலமும் கையறு நிலையிலும் அரசியல் அனுபவத்தால் தனது கணக்கின் வரவுப் பக்கத்தை அவர் உயர்த்திக்கொண்டார்.


வடக்கில் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபைகளைப் பொறுத்து அதன் அரசியல் கணக்கில் எந்தப் பதிவுகளையும் மேற்கொள்ளாது ஒரு உறங்கு நிலையைத் தற்போது பேணிவருகிறது. ஓடு மீன் ஓட உறுமீன் வரும் வரையில் அது வாடியிருப்பது போலத் தெரிகிறது. முன்னிலைத் தமிழ்க் கட்சிகளின் கூட்டுகள் நீண்டகாலம் நிலைக்கப்போவதில்லை என்பது அக்கட்சியின் எதிர்பார்ப்பாக உள்ளது. கடந்த காலம் அதனை அவர்களுக்குக் கற்றுத் தந்திருக்கிறது. தமிழ்க் கட்சிகளின் கூட்டுக்கள் எவ்வளவு விரைவில் குலையுமே அப்போது தேசிய மக்கள் சக்தி தனது கணக்கை ஆரம்பிக்கத் தொடங்கும். குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது போல ஒன்றில் சபைகளின் அதிகாரத்தை தான் கைப்பற்ற முயற்சி எடுக்கும். அல்லது சபைகளை உறங்கு நிலைக்குத் தள்ளி ஆணையாளரின் கீழ் கொண்டுவர முயற்சிக்கும். எதுவாயினும் அக்கட்சியின் அரசியல் கணக்கில் அது நல்ல வரவாகவே அமையும். அதுவரை அக்கட்சி தமிழ் மக்களிடம் நல்ல பிள்ளையாகவே நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கலாம்.

தேசிய மக்கள் சக்தியின் கணக்கில் வரவா இல்லையா என்பது தமிழ்க்கட்சிகளின் கைகளிலேயே உள்ளது. அக்கட்சிகள் அதை உதாசீனம் செய்யுமானால் மீண்டும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பிருந்த நிலைமைக்கு தமிழ் அரசியல் திரும்பிவிடும். அது தேசிய மக்கள் சக்திக்கு நாங்களாகவே வெற்றிலை வைத்து அழைத்ததாக அமைந்து விடும். கட்சிகள் தமது அரசியல் கணக்கில் வரவு செலவுகளை தேச நலன்சார்ந்து பதியாவிடில் அது தமிழ் மக்கள்ளின் அரசியல் கணக்கிலே பாரிய துண்டுவிழும்தொகையை உருவாக்கும் என்பதை தம்மைத் தமிழ்த் தேசியக் கட்சிகளாக எண்ணுவோர் மனங் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் ஆட்சியை நிர்ணயிக்கும் சக்தியாக இருந்த
# பா.ம.க. இந்த நிலைக்கு வந்தது ஏன்?





♦ முரளிதரன் காசி விஸ்வநாதன்

கடந்த 1991ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பல விதங்களில் தமிழ்நாட்டு அரசியலில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்த தேர்தல். எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு ஜெயலலிதாவின் தலைமையை அ.தி.மு.க. தொண்டர்கள் கிட்டத்தட்ட முழுமையாக ஏற்றுக்கொண்டார்கள் என்பதை இந்தத் தேர்தல்தான் சுட்டிக்காட்டியது. அதேபோல, புதிதாகத் தொடங்கப்பட்டிருந்த பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ்நாட்டு அரசியலில் பல பத்தாண்டுகளுக்கு நீடிக்கப் போகும் கட்சி என்பதையும் இந்தத் தேர்தல் முடிவுகள்தான் சுட்டிக்காட்டின.

இட ஒதுக்கீட்டுக்காக 1980களின் இறுதியில் மிகப் பெரிய போராட்டங்களை நடத்திய வன்னியர் சங்கம், 1989இல் பாட்டாளி மக்கள் கட்சியாக மாறியது. அதைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டின் சட்டமன்றத் தேர்தலில் எந்தப் பெரிய கட்சிகளுடனும் கூட்டணி அமைக்காமல் பா.ம.க போட்டியிட்டது. இந்தத் தேர்தலில், அக்கட்சியைச் சேர்ந்த பண்ருட்டி ராமச்சந்திரன் மட்டுமே வெற்றி பெற்றிருந்தாலும், 12 சட்டமன்றத் தொகுதிகளில் பாமக இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்தது. அதோடு, ஆறு சதவிகித வாக்குகளையும் பெற்றிருந்தது. வெற்றி பெற்ற பண்ருட்டி ராமச்சந்திரனை, பா.ம.கவினர் யானை மீது அமர்த்தி சட்டமன்றத்திற்கு அழைத்து வந்தார்கள்.

இதற்குப் பிறகு, பாட்டாளி மக்கள் கட்சிக்குத் தொடர்ச்சியாக ஏறுமுகம்தான். இதற்கு அடுத்து வந்த 1996ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான திவாரி காங்கிரஸுடன் கூட்டணி அமைத்து 116 இடங்களில் போட்டியிட்ட பா.ம.க. ஆண்டிமடம், எடப்பாடி, தாரமங்கலம், பென்னாகரம் ஆகிய நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றதோடு ஏழு தொகுதிகளில் இரண்டாவது இடத்தையும் பிடித்தது.

இதற்குப் பிறகு வந்த பெரும்பாலான தேர்தல்களில் பாட்டாளி மக்கள் கட்சி எந்தக் கூட்டணியில் இடம் பெறுகிறதோ, அந்தக் கூட்டணியே வெற்றி பெறும் எனக் கூறும் வகையில் தேர்தல் முடிவுகள் இருந்தன.

கடந்த 1998ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணியில் இடம்பெற்ற பா.ம.க., 5 இடங்களில் போட்டியிட்டு நான்கு இடங்களில் வெற்றி பெற்றது. அடுத்து வந்த 1999ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அ.தி.மு.கவுக்கு பதிலாக தி.மு.க. இடம்பெற்றது. அந்தக் கூட்டணியில் தொடர்ந்த பா.ம.க. 7 இடங்களில் போட்டியிட்டு ஐந்து இடங்களில் வென்றது.

கடந்த 2001ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிக்கு மாறிய பாட்டாளி மக்கள் கட்சி 27 இடங்களில் போட்டியிட்டு 20 இடங்களைக் கைப்பற்றியது. 2004ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலிலும் 6 இடங்களில் (தமிழ்நாடு 5, புதுச்சேரி 1) வெற்றி பெற்றது.

இத்தனைக்கும், இந்தத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என ரஜினிகாந்த் குறிப்பிட்டார். "ராமதாஸ் வெற்றி பெற்றால் போன ஜென்மத்தில் அவர் செய்த புண்ணியம் மிச்சமிருக்கிறது என்று அர்த்தம்" என்றார்.

ஆனால், இதையெல்லாம் மீறி அபார வெற்றி பெற்றது பா.ம.க. அடுத்து வந்த 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று 31 இடங்களில் போட்டியிட்டு 18 இடங்களில் வெற்றி பெற்றது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், 1998ஆம் ஆண்டு தேர்தலில் இருந்து 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்வரை, பா.ம.க. எந்தக் கூட்டணியில் இடம் பெறுகிறதோ அந்தக் கூட்டணியே வெற்றிபெற்றுவந்தது.

ஆனால், 2009ஆம் ஆண்டு தேர்தலில் இருந்து இந்த நிலை மாறத் தொடங்கியது. 2006ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருந்த பா.ம.க., 2009ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிக்கு மாறியது.

இந்தக் கூட்டணியில் பா.ம.க., ஆறு இடங்களில் போட்டியிட்டாலும் ஒரு இடத்தில்கூட வெற்றி பெறவில்லை. "அந்தத் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என ராமதாஸ் நினைக்கவில்லை. அதன் காரணமாகவே கூட்டணியை விட்டு அவர் வெளியேறினார். ஆனால், அவரது கணிப்பு தவறாக முடிந்தது" என்கிறார் மூத்த பத்திரிகையாளரான ப. கோலப்பன்.

இதற்குப் பிந்தைய தேர்தல்கள் எதிலுமே, பா.ம.க. எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கவில்லை. 2011ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற பா.ம.க. 30 இடங்களில் போட்டியிட்டது (முதலில் 31 இடங்கள் ஒதுக்கப்பட்டு பிறகு ஒரு இடத்தைத் திருப்பி அளித்தார் ராமதாஸ்). ஆனால், 3 இடங்களில் மட்டும்தான் வெற்றி கிடைத்தது.

கடந்த 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து பா.ம.க. 8 இடங்களில் போட்டியிட்டு, தருமபுரி தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றது. 2016ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் "மாற்றம் முன்னேற்றம் அன்புமணி" என்ற கோஷத்தை முன்வைத்து களத்தில் இறங்கியது பா.ம.க. ஆனால், ஒரு தொகுதியிலும் வெற்றி கிடைக்கவில்லை. பென்னாகரம் தொகுதியில் போட்டியிட்ட அன்புமணி ராமதாஸே சுமார் 18 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

இதையடுத்து, 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் அ.தி.மு.க.வோடு கூட்டணி அமைத்தது பா.ம.க. ஆனாலும், அந்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்தத் தொகுதியிலும் அக்கட்சியால் வெற்றி பெற இயலவில்லை. 2021ஆம் ஆண்டிலும் அதே கூட்டணியில் தொடர்ந்த பா.ம.க., 23 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு ஐந்து இடங்களில் வெற்றி பெற்றது.

"பாட்டாளி மக்கள் கட்சியின் உச்சகட்ட காலம் முடிந்துவிட்டது. பாட்டாளி மக்கள் கட்சியின் முக்கியமான கோரிக்கை, இட ஒதுக்கீடுதான். வன்னியர்களையும் உள்ளடக்கி மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டபோதே அது பெருமளவு எட்டப்பட்டுவிட்டது. அதுபோக, பாட்டாளி மக்கள் கட்சியின் அடிப்படை வாக்கு வங்கியாக இருக்கும் வன்னியர் சமூகமும் வெவ்வேறு கட்சிகளை நாட ஆரம்பித்துள்ளது" என்கிறார் மூத்த பத்திரிகையாளரான ஷ்யாம்.

பின்தங்கிய நிலையில் உள்ள இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் வன்னிய அமைப்புகளை ஒருங்கிணைக்க வேண்டும் எனக் கருதிய ராமதாஸ், 1980ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் தேதி வன்னிய அமைப்புகளின் தலைவர்களை ஒருங்கிணைத்து ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்.

அதன்படி, அரசியல் சார்பற்ற வன்னியர் சங்கம் ஒன்றை உருவாக்க முடிவெடுக்கப்பட்டு, வன்னியர் சங்கம் உருவாக்கப்பட்டது. இந்த சங்கத்துக்கு என "கனல்" என்ற பெயரில் புதிய மாத இதழும் துவங்கப்பட்டது.

இதற்குப் பிறகு, இட ஒதுக்கீட்டுக் கோரிக்கையை மையமாகக் கொண்டு தனது பயணத்தைத் துவங்கியது வன்னியர் சங்கம். தமிழ்நாட்டில் வன்னியர்களுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 2 சதவிகிதம் வழங்க வேண்டும் என்றும் ஈரோட்டில் நடந்த வன்னியர் சங்க முதல் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்குப் பிறகு தொடர்ந்து இதே கோரிக்கையை வலியுறுத்தி தொடர்ந்து போராட்டங்கள், பொதுக் கூட்டங்களை அந்த அமைப்பு நடத்தியது. இதற்கு நடுவில் முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரனை சந்தித்து இது குறித்துப் பேசுவதற்குப் பல முறை முயன்றும் அது நடக்கவில்லை என "கழகத்தின் கதை" நூலில் குறிப்பிடுகிறார் ராமதாஸ்.

இந்தப் போராட்டங்களைத் தொடர்ந்து, 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி முதல் 23ஆம் தேதி வரை தொடர் சாலை மறியல் போராட்டத்தை நடத்த பா.ம.க. முடிவு செய்தது. இந்தப் போராட்டங்களில் ஆயிரக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டில் பலர் உயிரிழந்தனர்.

இந்தப் போராட்டத்திற்குப் பிறகு, ராமதாஸ் வன்னிய மக்களின் முக்கிய அடையாளமாக உருவெடுத்தார். இந்நிலையில், 1989ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் தேதியன்று சென்னை மெரினா கடற்கரையில் நடந்த கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியைத் துவக்கினார் ராமதாஸ்.

ராமதாஸின் அறிக்கைகள் ஆரம்பக் காலத்தில் இருந்தே ஊடகங்களால் வெகுவாகக் கவனிக்கப்பட்டன என்கிறார் ப. கோலப்பன்.

"இந்திய அளவில் ஊடகங்களுக்கான அறிக்கையை புரஃபஷனலாக உருவாக்கிய முதல் சில கட்சிகளில் பா.ம.கவையும் ஒன்றாகச் சொல்ல முடியும். ஊடகங்களில் எது செய்தியாக வெளி வரும் என்பது ராமதாஸுக்கு நன்றாகத் தெரியும். தேவையில்லாத தகவல்கள் ஏதும் அறிக்கையில் இருக்காது. இதனால், ஊடகங்களில் அக்கட்சிக்கு குறிப்பிடத்தக்க இடம் கிடைத்தது" என்கிறார் அவர்.

"இந்தக் காலகட்டத்தில் சமூக நீதி, தமிழ்த் தேசியம், ஈழப் போராட்டத்திற்கான ஆதரவு போன்ற அம்சங்களை அவர் முன்னெடுத்தார். திருமாவளவனுடனும் சேர்ந்து செயல்பட்டார். ஆனால், 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு, அக்கட்சி பின்னடைவைச் சந்திக்கத் தொடங்கியது.

இதற்கு, விஜயகாந்தின் அரசியல் வருகை உள்ளிட்ட பல காரணங்கள் இருந்தன. பா.ம.க. வலுவாக இருக்கும் விருத்தாசலம் தொகுதியில் அக்கட்சியின் வேட்பாளரான கோவிந்தசாமியை பின்னுக்குத் தள்ளி விஜயகாந்த் வெற்றி பெற்றார். பல இடங்களில் பா.ம.கவுக்கான வாக்குகள் விஜயகாந்த் கட்சிக்கு இடம் மாறியிருந்தன" என்கிறார் ப. கோலப்பன்.

கடந்த 2010ஆம் ஆண்டுக்குப் பிறகு இடைநிலை சாதிகளை ஒன்றாகத் திரட்ட அவர் துவங்கிய அமைப்பு பலத்த விமர்சனங்களை எதிர்கொண்டது. அதேபோல, தருமபுரி மாவட்டம் நாயக்கன் கொட்டாயில் ஏற்பட்ட கலவரத்திலும் பா.ம.க. மீது குற்றம் சாட்டப்பட்டது. அதையொட்டி வந்த தேர்தலில் தருமபுரி தொகுதியில் பா.ம.க. வெற்றி பெற்றாலும், மாநிலத்தின் பிற பகுதிகளில் அதன் தாக்கம் எதிரொலிக்கவில்லை.

செல்வாக்கைத் தொடர்ந்து இழந்து வரும் நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள தந்தை - மகன் இடையிலான போட்டியால் பாட்டாளி மக்கள் கட்சியின் எதிர்காலம் மிகவும் சிக்கலாகி இருப்பதாகக் குறிப்பிடுகிறார் ஷ்யாம்.

"ஜூன் 18 அன்று ஒரே நாளில் பா.ம.கவின் இரு எம்.எல்.ஏ.க்கள் நெஞ்சு வலி என மருத்துவமனையில் சேர்ந்துள்ளனர். அ.தி.மு.க. அக்கட்சியுடன் கூட்டணி வைக்க நினைத்தாலும், இடங்களை தந்தைக்கும் மகனுக்கும் பிரித்தா கொடுக்க முடியும்?" எனக் கேள்வியெழுப்புகிறார் ஷ்யாம்.

பா.ம.க. கடைசியாகப் போட்டியிட்ட 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணியில் 10 இடங்களில் போட்டியிட்டு 4.33 சதவிகித வாக்குகளையே பெற்றது. தருமபுரியில் போட்டியிட்ட சௌமியா அன்புமணி மட்டுமே இரண்டாவது இடத்தைப் பிடித்தார். இந்த நிலையில்தான் கடந்த சில மாதங்களாக கட்சியின் நிறுவனர் ராமதாஸும் அவரது மகன் அன்புமணியும் மோதி வருகின்றனர்.

"வட தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் இன்னமும் அக்கட்சியின் வாக்கு வங்கி ஓரளவுக்கு அப்படியே நீடிக்கிறது. ஆகவே, அக்கட்சி ஒற்றுமையாக இருந்து, அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றால், அது ஒரு கடுமையான போட்டியைத் தர முடியும்" என்கிறார் ப. கோலப்பன்.

நன்றி - பி. பி. சி. தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ஈரானை கைவிடும் ரஷ்யா - சீனா? தெஹ்ரானில் உள்நுழையும் அமெரிக்கா!

ஈரானை நிபந்தனையின்றி சரணடையுமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்த போதிலும், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே பரஸ்பரம் ஏவுகணைத் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த போரில் மிகப்பெரிய திருப்பம் ஏற்படும் வகையில் அமெரிக்கா நேரடியாக தலையிட சாத்தியம் உள்ளது.

ட்ரம்ப் ஈரானை தாக்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் முதலில் அளித்துள்ள போதிலும், இந்நிலையில் இருந்து பின்வாங்கியுள்ளார். தற்போது ஈரான் நாட்டைத் தாக்கலாமா வேண்டாமா என்பது குறித்து இறுதியான தீர்க்கமான முடிவை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் எடுப்பேன் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஏவுகணை மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

ஈரான் இஸ்ரேலுடனான மோதலால் மத்திய கிழக்கில் மற்றொரு அரசியல்- பொருளாதார இழப்பு ரஷ்யாவுக்கு ஏற்படும் என்று கருதுகிறது. இஸ்ரேல் ஆபரேஷன் ரைசிங் லயனைத் தொடங்கிய போது, ரஷ்யா வெறுமனே மத்திய கிழக்கு ஆபத்தான போரை நோக்கி செல்கிறது என்று மட்டுமே விவரித்தது.

நீண்ட கால ஈரானுடனான தனது அரசியல்- இராணுவ உறவு முடிவுக்கு வருகிறதோ என மாஸ்கோ கருத வேண்டிய அவசியமும் உள்ளது. இப் போரில் உடனடியாக மாஸ்கோ அரசு ஈரானுக்கு இராணுவ உதவி செய்ய வரவில்லை. இருப்பினும், ரஷ்ய ஊடகங்கள் மாஸ்கோ அரசின் உதவியின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றன.



இருப்பினும் மோதலில் மத்தியஸ்தம் செய்ய கிரெம்ளினின் முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன. உக்ரைனில் போர் நடவடிக்கைகள் தொடர்கின்ற போதிலும், ரஷ்யா மத்திய கிழக்கில் ஒரு முக்கிய பங்காளியாகவும், அமைதியை நிலைநாட்டுபவராகவும் தன்னைக் காட்டிக் கொள்ள முடிவதாக மேற்குலக நாடுகள் கருதுகின்றன.

எவ்வாறாயினும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை நீண்ட காலம் நீடிக்கும் போது, தற்போதைய நிகழ்வுகளிலிருந்து ரஷ்யா நிறைய இழக்க நேரிடும் என்பதை மறுக்க முடியாது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும், ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியனும் கடந்த ஜனவரி 17, 2025 அன்று மாஸ்கோவில் உள்ள கிரெம்ளினில் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு மூலோபாய நல்லுறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ரஷ்ய-ஈரானிய மூலோபாய கூட்டாண்மை ஒப்பந்தம் ஆனது இராணுவ உறவை வலுப்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், இந்த ஒப்பந்தம் "பிராந்திய மற்றும் உலக மட்டங்களில் அமைதி மற்றும் பாதுகாப்பின் நலன்களுக்காக ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கும், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த மாஸ்கோ மற்றும் தெஹ்ரானின் நெருக்கமான ஒத்துழைப்புக்கான விருப்பத்திற்கும் சிறப்பு கவனம் செலுத்தியது" என்று தெரிவித்தார்.

ஐந்து மாதங்களுக்கு முன்பு ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மையில் கையெழுத்திட்ட ஒரு நாட்டின் மீது இஸ்ரேல் நடத்திய ஒரு பெரிய தாக்குதலை ரஷ்யாவால் தடுக்க முடியவில்லை என்பது உண்மைதான். இந்த விஷயத்தில் ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

ஏனெனில் இஸ்ரேலைக் கண்டிக்கும் அரசியல் அறிக்கைகளுக்கு அப்பால் செல்ல மாஸ்கோ தயாராக இல்லை என்பது தெளிவாகிறது. உண்மையில் உடனடியாக ஈரானுக்கு இராணுவ உதவி வழங்க ரஷ்யா தயாராக இல்லை என்பது தெளிவாக தெரிகிறது.

**சீனாவின் மத்திய கிழக்கு இராஜதந்திரம்:**

இஸ்ரேல்-ஈரான் போர் தொடங்க முன், பெய்ஜிங்கின் மத்திய கிழக்கு இராஜதந்திரம் இது வரையில் திட



மாகவே இருந்தது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் 2023 இல் அப்போதைய ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை பெய்ஜிங்கிற்கு வரவேற்று, சீனா ஈரானுடனான தனது உறவை வளர்க்க முயன்றார்.

2023 ஆம் ஆண்டில் பிராந்திய எதிரிகளான ஈரான் மற்றும் சவுதி அரேபியா இடையே நல்லிணக்கத்தை சீனா வெற்றிகரமாக மத்தியஸ்தம் செய்தது. தற்போது இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் அதிகரித்து வரும் மோதலில் அமைதியை ஏற்படுத்தத் தயாராக இருப்பதாகவும் சீனா கூறியுள்ளது.


இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே போர் வெடித்தன் காரணமாக சீனாவின் ராஜதந்திர நிலைப்பாடு ஈரான் சார்பாகவே இருந்திருக்க வேண்டும். பொருளாதார இராணுவ ரீதியிலான உறுவுகளை பேணும் வகையில் ஈரான் அரசுக்கு சீனாவின் ஆதரவு தேவை உள்ளது. ஆனால் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் விரைவில் மோதலைத் தணிக்க அழைப்பு விடுத்தார்.

**சீனாவின் மூலோபாய பங்காளியான ஈரான்:**

சீனா பொருளாதார ரீதியாக தெஹ்ரானுக்கு மிக நெருக்கமான உறவில் உள்ளது. முக்கியமாக ஈரானின் எரிசக்தி வளங்கள் காரணமாக, சீனாவின் மூலோபாய பங்காளியாக ஈரான் விளங்குகிறது.

சீனா இதுவரை ஈரானிய எண்ணெயை அதிகம் இறக்குமதி செய்யும் நாடாகும். ஈரான் உட்பட வளைகுடா நாடுகளின் பெரும்பாலான எண்ணெய் ஏற்றுமதிகள், ஹார்முஸ் ஜலசந்தியின் வழியாகவே செல்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஜலசந்தி மூடப்பட்டால், அது சீனாவில் பெரிய பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

அண்மைக் காலங்களில் சர்வதேச அரங்கில் இராஜதந்திர செல்வாக்குடன் கூடிய வல்லரசாக சீனா தன்னைக் காட்டிக் கொள்ள விரும்புகிறது. அமெரிக்காவிற்கு மாற்றாக ஒரு மத்தியஸ்தராகச் செயல்படும் திறன் கொண்டதாக சீனா முயல்கிறது. ஆனால் தற்போதைய மோதல் அதன் சர்வதேச செல்வாக்கின் வரம்புகளை மீறி வர முடியாது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.



**டிரம்ப் இறுதி எச்சரிக்கை :**

ஈரான் வான்வெளியை முழுமையாக அமெரிக்காவே கட்டுப்படுத்துகிறது என்று ட்ரம்ப் அறிவித்துடன், ஈரானிடம் நல்ல வான் கண்காணிப்பு கருவிகள் மற்றும் பிற பாதுகாப்பு உபகரணங்கள் நிறைய உள்ளன. ஆனால் அது அமெரிக்க தயாரிப்புக்கு ஈடாகாது. அமெரிக்காவை விட யாரும் சிறப்பாகச் செய்ய முடியாது என்றும் கூறியுள்ளார்.

இப்போதைக்கு ஈரான் தலைவரை கொல்லும் எண்ணம் இல்லை. ஆனால் ஈரானின் அதி உயரிய தலைவர் அயோத்துல்லா அலி காமெனி எங்கே பதுங்கியிருக்கிறார் என்று எங்களுக்குத் தெரியும் என்றும் ட்ரம்ப் எச்சரித்து உள்ளார்.

ஈரானின் அணு ஆலைகளை துவம்சம் செய்ய அமெரிக்க போர் விமானங்கள், விமானம் தாங்கி கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கு வானில் வைத்தே எரிபொருள் நிரப்பக்கூடிய நாற்பதுக்கும் மேற்பட்ட ராங்கர் விமானங்கள் உள்ளிட்டவை ஐரோப்பிய நாடுகளின் விமான தளங்களில் அமெரிக்காவால் நகர்த்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தாக்குதல்களை நேரடியாக வழிநடத்துவதற்கும், பார்வையிடுவதுக்குமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையின் நிலக்கீழ் அறைக்கு அண்மையில் சென்றதாகவும் கூறப்படுகிறது.

ஈரானின் அணு ஆலைகளை அமெரிக்கா தன்னிடம் தரவேண்டும் எனவும், தராவிட்டால் தாமே அதை கைப்பற்றி அனைத்து அணுக் கட்டமைப்புக்களையும் சிதைப்போம் என்றும் தற்போது அமெரிக்க படைகளின் பாதுகாப்பு அமைச்சு அவசர செய்தியொன்றை ஈரானுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேலும் அமெரிக்க ஜனாதிபதியே நேரடியான ஒரு எச்சரிக்கையையும் ஈரான் மக்களுக்கு கொடுத்திருக்கிறார். அதாவது ஈரானின் தலைநகரிலிருக்கு அனைவரையும் வெளியேறுமாறும், தாக்குதல் தலைநகரைநோக்கி வந்துகொண்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.



**பெண்டகன் போருக்கு தயார் ?**

ஈரானில் தொடரும் போர் சிலவேளைகளில் பெரும் போராக உருவெடுத்து பல நாடுகளுக்கும் பரவி செல்லவும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. காரணம் ஈரானை காப்பாற்ற துருக்கி,ரஷ்யா,சீனா உள்ளிட்ட நாடுகள் அரை மனதோடு நிற்கிறார்கள். இந்த நாடுகளின் கொள்கை மாறினால் போர் சர்வதேச அளவில் வளர்கின்ற நிலைக்கு ஏற்படும்.

ட்ரம்ப் முதலில் ஈரானை தாக்க ஒப்புதல் வழங்க தயங்கினாலும், ஈரானின் அணுசக்தி தளங்களை குறிவைத்து தாக்கத் தயார் என கூறியுள்ளார். பெண்டகன் போருக்கு தயாராகிறது என்பது தெளிவாக தெரிகிறது. அதனாலேயே ஈரான் நிபந்தனை இல்லாமல் சரணடைய வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்கு ஈரான் உயர் தலைவரான அயத்துல்லா காமேனி கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து, "பதிலளிக்க முடியாத விளைவுகள் ஏற்படும்" என எச்சரிக்கை விடுத்தார். ஈரானில் இதுவரை 450 பேர் இஸ்ரேல் வான்வீச்சில் உயிரிழந்துள்ளனர். 24 இஸ்ரேலியர்கள் பதிலடி தாக்குதல்களில் பலியாகியுள்ளனர். போரின் விளிம்பில் உலகம் முழுவதும் தள்ளப்பட்டு உள்ளது.

**இரு வாரத்தில் முடிவு !**

ட்ரம்ப் ஈரானை தாக்கும் திட்டங்களுக்கு முன்பு ஒப்புதல் அளித்தாலும், ஈரான் நாட்டைத் தாக்கலாமா வேண்டாமா என்பது குறித்து இறுதி முடிவை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பேன் என்று தெரிவித்துள்ளார்.


ஆரம்பத்தில் ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை கைவிட ஒப்புக்கொண்டால் அமெரிக்க ஜனாதிபதி தாக்குதல்களைத் தொடங்குவதைத் தவிர்த்து வந்ததாக மூத்த உளவுத்துறை தெரிவித்தார்.


தற்போது ஈரானில் உள்ள நிலத்தடி யுரேனியம் செறிவூட்டல் நிலையமான ஃபோர்டோ மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவது குறித்து ட்ரம்ப் பரிசீலித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மத்திய கிழக்கின் வரலாற்று பகைமையாக கருதப்படும் இஸ்ரேல்- ஈரான் இடையேயான தொடரும் போரினால் உலகளாவிய எண்ணெய் விலை உயர்வு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இப்போரின் நிலை எதிர்வரும் நாட்களில் மாறினாலும், எண்ணெய் வளத்தை நோக்கிய மேற்குலக பொருளாதார ஆதிக்கம் தொடரவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் சர்வதேச யோகா தின நிகழ்வு





கொழும்பு, ஜுன் 22

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நேற்றுச் சனிக்கிழமை இலங்கையின் பல பகுதிகளிலிருந்து வந்த சுமார் 1000 யோகா ஆர்வலர்கள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஒன்றுகூடி ஒருங்கிணைந்த யோகா மற்றும் தியான நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், இலங்கை சுகாதார அமைச்சு, இலங்கை பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இணைந்து ஏற்பாடு செய்தன.

இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, யோகா அறிவை எளிதில் மக்களுக்கு வழங்கும் நோக்கில் ஹத யோக பிரதீபிகா நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது.


அத்துடன் அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களில் உள்ள இந்தியத் தூதரகங்களும் தனித் தனி யோகா நிகழ்வுகளை ஏற்பாடு செய்தன.

மேலும், ஜுன் 19 அன்று, சுகாதார அமைச்சின் ஆயுர்வேத திணைக்களமும் சுவாமி விவேகானந்த பண்பாட்டு மையமும் இணைந்து, 113 ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் 4 பல்கலைக்கழகங்களிலும் ஒரே நேரத்தில் யோகா அமர்வுகளை நடத்தின. இது இலங்கையில் நடந்த முதல்



தேசிய ஒருங்கிணைந்த யோகா முயற்சியாகும்.

இந்த நிலையில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற யோகா நிகழ்வில் அறிவியல், தொழில்நுட்ப, தொழிலாளர், பாதுகாப்பு, மத விவகாரங்கள், விளையாட்டுத் துறைகள் தொடர்பான அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)



# கானகப் பாதையில் 10,000 பேர் பயணம்

காரைதீவு, ஜுன் 22

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டதும் முதல் நாளில் 10 ஆயிரத்து 450 அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்தனர்.

இது கடந்த 2000 ஆண்டு கால வரலாற்றில் முதல் நாளில் சென்ற அதிகூடிய அடியார்களின் எண்ணிக்கையாகும்.

கடந்த காலங்களில் பொதுவாக சுமார் 4 ஆயிரம் அடியார்கள் முதல் நாளில் பிரவேசிப்பதுண்டு.

கடந்த வருடம் மட்டும் அது 5000 ஐ தாண்டியது.

ஆனால், இவ் வருடம் பத்தாயிரத்தை தாண்டியது.

அதுமட்டுமின்றி நேற்றுச் சனிக்கிழமை 2 ஆம் நாளில் சுமார் நான்காயிரம் பக்தர்கள் காட்டுக்குள் பிரவேசித்தனர்.

இம்முறை சுமார் 50 ஆயிரம் பேர் வரை கானகப் பாதையில் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மட்டு. மாவடிச்சேனையில்

# சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இரண்டு இளைஞர்கள் சிக்கினர்

மட்டக்களப்பு, ஜுன் 22

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இரண்டு இளைஞர்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிச்சேனை எம். கே. எரிபொருள் நிரப்பு நிலைய பிரதான வீதி பகுதியில் சந்தேகத்துக்கிடமாக இரு இளைஞர்கள் நடமாடியுள்ளனர்.

இதனை அவதானித்த பொதுமக்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் மட்டக்களப்பு - சந்திவெளி பகுதியைச் சேர்ந்த 18 மற்றும் 25 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மிளகாய்த்தூள், கையுறை, முகக்கவசம் ஆகிய பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான இருவர் தொடர்பாகவும் வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மெய்ப்பொருள்...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

சமூக ஊடகங்கள் கால் முளைக்காத காலத்தில்கூட வதந்திகள் வேகமாகப் பரவின. பிள்ளையார் பால் குடித்தார் பிரபலமான கோயில் ஒன்றில் அமங்கலம் நடந்து விட்டதால் பெண்கள் எல்லோரும் தாலி மாற்றிக்கொள்ள வேண்டும் வீட்டில் எத்தனை ஆண் பிள்ளைகள் இருக்கிறார்களோ வாயிலில் அத்தனை விளக்கேற்ற வேண்டும் என வதந்திகள் பெரும்பாலும் நம்பிக்கை சார்ந்ததாக இருந்தன. அப்போது அதைக் கூறியவர்கள் நம் உறவினர் அல்லது நமக்கு நெருக்கமானவர்களாக இருந்தனர் இப்போது அப்படி இல்லை. யாரோ எவரோ ஒரு குழுவில் பதிவிடும் காணொலியை எந்த முன்முடிவும் இல்லாது பார்க்கும்போது நம் சிந்தனை அதை நோக்கிச் செல்கிறது.

தற்போது எண்ணற்ற காணொலிகள் காரணமாக தவறான தகவல்கள் தொடர்ந்து பரப்பப்படுகின்றன. தவறான தகவல்கள் நமக்குள் பதிவாகி நம் எண்ணங்கள் வெவ்வேறு வடிவம் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதைக் கருத்தில் கொள்வோருக்கு எது குறித்தும் எந்தச் சலனமும் ஏற்படாது.

# நாடு திரும்பும் இலங்கையர் இஸ்ரேலிய விசாவை வைத்திருப்பது கட்டாயமாகும்

கொழும்பு, ஜுன் 22

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இஸ்ரேலிலிருந்து எகிப்து வழியாக இலங்கைக்கு பயணிக்க விரும்பும் இலங்கையர்கள் செல்லுபடியாகும் இஸ்ரேலிய விசாவை வைத்திருப்பது கட்டாயமாகும் என்று இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

டெல் அவிவ் விமான நிலையம் மூடப்பட்டதால் இஸ்ரேலை விட்டு வெளியேற விரும்பும் இலங்கையர்கள் தூதரகத்திலிருந்து தொடர்புடைய ஆவணங்களைப் பெற்ற பிறகு எகிப்திய எல்லை வழியாக வெளியேறலாம் என்று இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்னர் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தது.

இருப்பினும், நேற்று முன்தினம் எகிப்திய எல்லையைக் கடந்து கெய்ரோ விமான நிலையத்திலிருந்து இலங்கைக்குப் புறப்பட்ட நான்கு இலங்கையர்களில் ஒருவருக்கு இஸ்ரேலிய விசா இல்லாத காரணத்தால், எகிப்திய அதிகாரிகளால் நீண்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பின்னர், இது தொடர்பில் எகிப்துக்கான இலங்கைத் தூதுவருக்குத் தகவல் தெரிவித்த பிறகு, எகிப்திய எல்லை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்ள முடிந்ததாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டாரா தெரிவித்தார்.

அவசர நிலையில் கூட, செல்லுபடியாகும் இஸ்ரேலிய விசா இல்லாத அல்லது காலாவதியான விசா ஊடாக வெளிநாட்டினர் எகிப்துக்குள் நுழைய முடியாது என்றும் இவ்வாறு பயணிக்க முயற்சிப்பது நீண்ட விசாரணைகளுக்கும் கைதுக்கும் கூட வழிவகுக்கும் என்றும் இஸ்ரேலிய தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, இஸ்ரேலிய விசாக்கள் இல்லாத அல்லது விசாக்கள் காலாவதியான இலங்கையர்கள் எகிப்து வழியாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட மாட்டார்கள், மேலும் செல்லுபடியாகும் இஸ்ரேலிய விசாக்கள் இல்லாதவர்கள் இலங்கைக்கு புறப்பட டெல் அவிவ் சர்வதேச விமான நிலையம் திறக்கும் வரை காத்திருக்க வேண்டியிருக்கும் என்றும் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இலங்கை திரும்புவதற்காக மேலும் இரு இலங்கையர்கள் நேற்று முன்தினம் ஆவணங்களைப் பெறுவதற்காக தூதரகத்துக்கு வந்ததாக தூதுவர் தெரிவித்தார்.

இஸ்ரேலின் பல முக்கிய நகரங்களை குறிவைத்து ஈரான் நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் இஸ்ரேலிய [illegible] இலங்கை [illegible] என்றும் அந்த நாட்டு அரசாங்கம் வழங்கும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் தூதுவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், இஸ்ரேலும் நேற்று ஈரான் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளது. மேலும், ஈரானில் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது புதிய தொடர் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன.

கடந்த 13 ஆம் திகதி முதல் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களால் ஈரானில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 657 ஐ எட்டியுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

மேலும், இந்தத் தாக்குதல்களில் 2,000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இஸ்ரேலிய தாக்குதல்களுக்கு பதிலடியாக ஈரானிய தாக்குதல்களில் 25 பேர் கொல்லப்பட்டதாகவும், சுமார் 1,300 பேர் காயமடைந்துள்ளதாகவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன. (எ)

# பூந்தோட்டம் பெரியார்குளம் வீதிக்கு காப்பெற்றிடும் பணி நேற்று ஆரம்பம்



வவுனியா, ஜுன் 22

வவுனியா பூந் தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலிருந்து பெரியார்குளம் முருகன் ஆலயம் வரை யான 1200 மீற்றர் நீளம் கொண்ட வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப் பட்டன.

கிராமப் புறவீதிகள் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் இந்தப் பணிக்காக சுமார் 11 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநகர சபையின் வட்டார உறுப்பினர் சி.கிருஸ்ணதாஸின் கோரிக்கைக்கு அமைய ம.ஜெகதீஸ்வரன் எம. பியின் ஒழுங்குபடுத்தலில் இவ்வீதி திருத்தப்படுகிறது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் வீதி அமைக்கும் பணியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர் சி. கிருஸ்ணதாஸ உட்பட பொது அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்துகொண் டனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கான சர்வதேச விசாரணையை வலியுறுத்துகிறது ஒக்லெண்ட் நிறுவகம்!

லண்டன், ஜூன் 22

இலங்கையில், தமிழர்களை இலக்காகக் கொண்ட, தொடர்ச்சியான காணி அபகரிப்புகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து, அவதானம் செலுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையை ஒக்லாண்ட் நிறுவகம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில், ஒக்லாண்டில் உள்ள ஒரு சுயாதீனமான, முற்போக்கான கொள்கை சிந்தனைக் குழுவான ஒக்லாண்ட் நிறுவகம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்து, 16 ஆண்டுகள் ஆகின்றபோதிலும், 1948 ஆம் ஆண்டு முதல் ஒரங்கட்டப்பட்ட தமிழர்கள் இன்னும் நீதிக்காக காத்திருக்கின்றனர்.

செம்மணியில், அண்மையில் 19 என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி விவகாரத்தில், சர்வதேச கண்காணிப்புகள் கோரப்படுவது, தொடர்ச்சியாக தண்டனைகள் விலக்கப்படுவதையே எடுத்துகாட்டுகிறது.

இந்த நிலையில், வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளை, குறிப்பாக முள்ளிவாய்க்காலில், போரில் சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டதாகக் கருதப்படும் பகுதிகளைப் பார்வையிடுமாறு, அந்த நிறுவகம் வோல்கர் ரேர்க்கை கோரியுள்ளது.

காணி அபகரிப்புகள், கட்டாய பௌத்தமயமாக்கல் போன்றவற்றின் மூலம், தமிழ் அடையாளத்தை அழிக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அத்துடன், இந்தப் பகுதி கடுமையான இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளதாகவும் அந்த நிறுவகம் கூறுகிறது. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் போராட்டக்காரர்கள் அரசாங்கத்தின் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர்.

நாட்டில் தலைமைத்துவ மாற்றம் இருந்தபோதிலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன்பாடு உட்பட பல அடக்குமுறைக் கொள்கைகள் தொடர்கின்றன. ஆணையாளரின் வருகையும், மனித உரிமைகள் பேரவையின் 59ஆவது கூட்டத்தொடரும், பொறுப்புக்கூறல், காணி மீளபெறுதல், இராணுவமயமாக்கல் மற்றும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்துவதற்கான முக்கியமான தருணங்களாகக் கருதப்படுகின்றன.

இந்தநிலையில், நீதி மற்றும் நல்லிணக்கத்தை அடைவதில் சர்வதேச சமூகம், தமது அழுத்தத்தைத் தொடரவேண்டும் என ஒக்லண்ட் நிறுவகம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# தமிழ் அரசு கட்சியின் செயல்பாடுகளால் வவுனியா வடக்கு பறிபோகும் நிலையில்

வவுனியா, ஜூன் 22

தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டால் வவுனியா வடக்கு பிரதேச சபை தேசிய மக்கள் சக்தியிடம் பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா வடக்கு பிரதேச சபையில் தேசிய மக்கள்சக்தி 6 உறுப்பினர்கள், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 5 உறுப்பினர்கள், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 4 உறுப்பினர்கள், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 3 உறுப்பினர்கள், சிறீ லங்கா தொழிலாளர் கட்சி 2 உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தி 2 உறுப்பினர்கள், சர்வஜன அதிகாரம் 1 உறுப்பினர் என 23 உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தேசியக் கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன இணைந்து ஆட்சி அமைப்பதாக முன்னராக கட்சிகள் மட்டத்தில் தீர்மானம் எட்டப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் வவுனியா மாநகர சபை ஆட்சி ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி வசம் சென்றது. தற்போது வவுனியா வடக்கு பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழரசுக் கட்சி 5 உறுப்பினர்களுக்குள்ளும் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சி சார்பில் வவுனியா வடக்கில் தி.கிருஸ்ணவேணி என்பவரை தவிசாளராக நிறுத்துவதாக தமிழரசுக் அறிவித்துள்ளது. குறித்த தவிசாளரை ஏற்க முடியாது என தமிழரசுக் கட்சியின் வட்டாரம் வென்ற 3 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் 3 உறுப்பினர்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கட்சி தவிசாளரை மாற்றாது தி. கிருஸ்ணவேணி என்பரை முன்னுறுத்துமாக இருந்தால் தாம் வேறு ஒருவரை முன்னிறுத்த வேண்டி வரும் என அவர்கள் கட்சியிடம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களிடமும் பேசியுள்ளனர்.

அத்துடன், எதிரணியில் தேசிய மக்கள் சக்தி, சிறீ லங்கா தொழிலாளர் கட்சி என்பன இணைந்து 8 உறுப்பினர்களை கொண்டுள்ளதுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு உறுப்பினரும் குடியேற்ற கிராமத்தை சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர் என்பதுடன், சர்வஜன அதிகார உறுப்பினரும் பெரும்பான்மை இனத்தவராவார். இதனடிப்படையில் தேசிய மக்கள் சக்தி தரப்பு 10 உறுப்பினர்களை இலகுவாக பெற்றுக் கொள்ளும் நிலை உள்ளது.

மறுபுறத்தில் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்பன 12 உறுப்பினர்களை கொண்டுள்ளதுடன் இதில் தமிழரசுக் கட்சியின் இருவர் ஒரு நிலைப்பாட்டிலும், மூவர் வேறு நிலைப்பாட்டிலும் உள்ளதால் தெரிவின் போது வாக்குகள் மாறுபட வாய்ப்புள்ளது. இதனால் தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் தேசியக் கட்சிகள் சமநிலை பெற்று திருவுளச்சீட்டுக்கு செல்லவோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றைய உறுப்பினரின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கவோ வாய்ப்புள்ளது.

எனவே, தமிழரசுக் கட்சி இது தொடர்பில் கவனம் செலுத்தி தவிசாளரது பெயரை முன்மொழிந்தால் மட்டுமே தமிழ் தேசியக் கட்சிகள் ஆட்சி அமைக்கும் உறுதியான நிலை ஏற்படும் என மற்றைய தமிழ் தேசியக் கட்சிகளின் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

## செம்மணி...

இராணுவத்தினர்மீது குற்றம் சுமத்துவது தமிழ்த் தரப்பினரின் வழமை. முதலில் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் உண்மையில் யாருடையவை என்பது பரிசோதனைகளின் மூலம் கண்டறியப்படவேண்டும்.

ஏனெனில், வடக்கில் போர் மற்றும் அசாதாரண நிலைமைகளின்போது தமிழ் மக்களும் இறந்தார்கள், முஸ்லிம் மக்களும் இறந்தார்கள், சிங்கள மக்களும் இறந்தார்கள், விடுதலைப் புலிகளும் இறந்தார்கள், இராணுவத்தினரும் இறந்தார்கள்.

தற்போது மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் தமிழ் மக்களுடையவை என்றால் அவர்கள் ஏன் உயிரிழந்தார்கள் என்பது ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டும். வடக்கில் போரில் மாத்திரம் தமிழ் மக்கள் இறக்கவில்லை. விடுதலை புலிகளின் சித்திரவதைகளின்போதும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். எனவே, எல்லாவற்றுக்கும் இராணுவத்தினர் மீதும், கடந்த அரசுகள் மீதும் குற்றஞ்சாட்டுவதைத் தமிழ்த் தரப்பினர் தவிர்க்கவேண்டும்.

யாழ். செம்மணியில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியை வைத்து தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேட முயல்கின்றனர் என்பதே உண்மை. இந்தச் செயலை அவர்கள் நிறுத்தவேண்டும்.

முதலில் அந்தப் புதைகுழியில் உள்ள மனித எலும்புக்கூடுகள் யாருடையவை என்பதும், அவர்கள் ஏன் உயிரிழந்தார்கள் என்பதும் பரிசோதனைகளின் மூலம் கண்டறியப்பட வேண்டும்-என்றார். (அ)

## மின்சார...

விலைகளை ஒழுங்குபடுத்தவேண்டும் என்று நுகர்வோர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கிடையில், பல கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் கட்டணங்கள் பெருமளவில் அதிகரித்ததால் பெற்றோர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர் தலையிட்டு சரியான முடிவை எடுக்குமாறு பெற்றோர்கள் கேட்டுள்ளனர். (அ)

## செம்மணி புதைகுழிக்கு...

இளையோர் அமைப்பினால் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை செம்மணி வளைவுப் பகுதியில் வெகுசனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அணையா விளக்குப் போராட்டம் என பெயரிடப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தின்போது தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையா விளக்கினை முன்னிலைப்படுத்தியே இந்தப் போராட்டம் ஏற்பாட்டாளர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போராட்டம் இடம்பெறும் மூன்று தினங்களில் முதல் இரண்டு நாட்களிலும் சுழற்சி முறையிலான அடையாள உண்ணாவிரதமும், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான செய்திப் பட கண்காட்சியும், மக்கள் கையெழுத்து திரட்டலும், செம்மணி மனிதப் புதைகுழியோடு தொடர்புபட்ட கதை, கவிதை வாசிப்பும் நாடக அளிக்கையும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், 25ஆம் திகதியாகிய மூன்றாம் நாள் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன்

போராட்டத்தின் இறுதி நாளன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ரர்க் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில் அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் அமையும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த போராட்டத்துக்கு தமிழ் அரசியல் கட்சிகள், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன தமது ஆதரவை வெளியிட்டுள்ளன. (அ)

## வலி. வடக்கில்...

போராட்டத்தில் காணி உரிமையாளர்கள் பதாதைகளைத் தாங்கி கோஷங்களை எழுப்பினர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இருந்து வரும் காணிகளை விடுவிக்கக் கோரியே இந்த அமைதிவழிப் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

மக்களின் விவசாய நிலங்கள், குடியிருப்பு நிலங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு காணிகள் யுத்தம் காரணமாக கடந்த 30 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வருகின்றன. ஆனால், யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் ஆட்சிக்கு வந்த ஒவ்வோர் ஆட்சியாளர்களும் மக்கள் காணிகளை படிப்படியாக சிறிய சிறிய துண்டுகளாக விடுவித்தனர்.

இருப்பினும் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் சுயமாக தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாத நிலையில் 2,400 ஏக்கர் காணிகளையும் முழுமையாக விடுவிப்பதே தமது வாழ்வியலை முன்னெடுக்க முடியும் என்ற நோக்கில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## அறிவுறுத்...

உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று அக்கரைப்பற்றில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரனின் அலுவலகத்தில் நடைபெற்றது. சத்தியப்பிரமாண நிகழ்வில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## அரசியல்வாதிகள்...

வரையிலான ஐந்து மாதங்களில், முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் உயர் அரச அதிகாரிகள் உள்ளிட்ட 607 நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்குகளில் முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே, நாமல் ராஜபக்ஷ, நளின் பெர்னாண்டோ, கெஹலிய ரம்புக்வெல, ரவி கருணாநாயக்க, யோசித ராஜபக்ஷ, பிரபல துடுப்பாட்ட வீரர் சசித்திர சேனாநாயக்க மற்றும் பலம் வாய்ந்த போதைப் பொருள் கடத்தல்காரர்கள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புதியதொரு...

எதிரணியிலிருந்து குரல் கொடுத்து போராட்டத்தின் ஊடாக அவற்றை பெற்றுக்கொள்ளும் முறைமையை எதிர்கால மாணவர்களுக்கு வழங்கவே எதிர்பார்த்தோம்.

ஆனால் எம்மால் தற்போது ஆளும் தரப்பிலிருந்து உரிமைகளை பெற்றுக்கொள்ளும் முறைமையை உருவாக்க முடிந்துள்ளது. அந்த வகையில் பல வருடங்களுக்கு பின்னர் எம்முடைய சோசலிச மாணவர் அணி வெற்றி கொண்டுள்ளது. அதுவும் அநுரகுமார திசாநாயக்க சகோதரரின் ஆட்சியில் அந்த வெற்றியை எம்மால் சாத்தியமாக்க முடிந்துள்ளது.

பல்வேறு தோல்விகள் சவால்களை எதிர்கொண்டே நாம் வெற்றியை தழுவி உள்ளோம். சித்திரவதைகளுக்குள்ளும் உள்ளாகியுள்ளோம். இத்தகைய பின்னணியில் நாம் ஆட்சிக்கு வந்தமையை தொடர்ந்து சோசலிச கொள்கைகளை காட்டிக்கொடுப்புக்கு உள்ளாகியுள்ளதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

எம்முடைய போராட்டங்கள் இன்னமும் நிறைவடையவில்லை. முதலாளித்துவத்தை இல்லாதொழித்து புதிய சோசலிச யுகத்தை உருவாக்கும் பயணத்தையே நாம் முன்னெடுத்து வருகின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# எரிபொருள் மாபியாவையே இந்த அரசும் ஊக்குவிக்கிறது!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 22

**தற்போதைய அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவித்து, தற்போதுள்ள எரிபொருள் மாபியாவை மாற்றிய மைத்து முறைமையில் மாற்றத்தை கொண்டு வருவோம் என்று உறுதியளித்திருந்தது. இருந்த போதிலும் இன்று, அந்த முறைமையில் மாற்றம் வார்த்தைகளுக்குள் மட்டுண்டு, எரிபொருள் ஆற்றல் மாபியாவை ஊக்குவிக்கும் நிலைக்கு வந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று விசேட அறிவிப்பை விடுத்து தெரிவித்தார்.**



அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

நமது நாடு எரிசக்தி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தருணத்தில், 2024 ஆம் ஆண்டளவாகும் போது சூரிய மின்சக்தித் மூலம் நமது எரிசக்தி கட்டமைப்பிற்கு 500 மெகாவாட் பங்களிப்பு வழங்கப்பட்டன. 70 வீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதே அரசாங்கத்தின் அவா என்றாலும், தற்போதைய அரசாங்கம் சூரிய ஆற்றலையும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியையும் அழித்து எரிபொருள்கள் மீதமைந்த எரிசக்தி மாபியாவை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இது முறைமையில் ஏற்படும் அல்லது ஏற்படுத்தப்பட்ட மாற்றமா? இல்லை. மாறாக தற்போதுள்ள எரிபொருள் மற்றும் எரிசக்தி மாபியாவை அவ்வாறே தொடரும் நடவடிக்கை.

சூரிய சக்தி நாட்டுக்கு 20 ஆண்டுகளுக்கு நிதி நிலைத்தன்மையை பெற்றுத் தருகிறது. நீண்ட கால சேமிப்பையும் கொண்டு வருகிறது. இது சுற்றுச்சூழலுக்கு உகந்த துறையாகவும் காணப்படுகின்றன. எரிபொருளை பயன்படுத்தும் போது நிதி நிலைத்தன்மையை கொண்டு வராது. சுற்றுச்சூழலுக்கும் இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

இயற்கை எரிவாயுவின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளன. அனல் மின் நிலையம் மற்றும் எரிபொருள் ஆற்றல்கள் மீது நாடு தங்கியிருக்குமானால் டொலர் செலவையும் எதிர்கொள்ளும். சூரிய சக்தி பயன்பாட்டால் உள்நாட்டு செலவு மட்டுமே காணப்படும்.

உலக சந்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் ரூபாவின் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சி போன்ற பிரச்னைகளுக்கு சூரிய சக்தி ஒரு சிறந்த ஆற்றல் மூலமாகும். இது நாட்டிலிருந்து அந்நியச் செலாவணி வெளியேறுவதையும் குறைக்கும். எனவே தயவு செய்து இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள். எரிபொருள் மாபியாவுக்கு இடமளியாது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுங்கள் - என்று கூறியுள்ளார். (அ)

## நாவாந்துறையில் இளைஞர், பெண் ஐஸ் போதைப்பொருளுடன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 22

நாவாந்துறைப் பகுதியில் 440 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவரும் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## பதுளையில் பேருந்து விபத்து மூவர் பலி; 34 பேர் காயம்!


கொழும்பு, ஜூன் 22

பதுளை - மஹியங்கனை பிரதான வீதியில் துன்ஹிந்த 4ஆவது மைல்கல் பகுதியில் நேற்று மாலை 06 மணிக்கு பேருந்து ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 34 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான பேருந்து பதுளையிலிருந்து அனுராதபுரத்துக்கு யாத்திரீகர்கள் குழுவை ஏற்றிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் சிக்கியவர்கள் தம்புத்தேகம பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்கான காரணம் உடனடியாக அறியப்படவில்லை.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



## "அதிகாரத்தைக் கைப்பற்ற அநுர அரசு பிரபாகரனுடனும் கூட்டணியமைக்கும்"

கொழும்பு, ஜூன் 22

அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு பிரபாகரனுடனும் கூட்டணி அமைக்கும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஊழல் மோசடியாளர்களுடன் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்ற அதிகாரசபைகளில் ஆட்சியமைப்பதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது.

குருநாகல் மாநகர சபை முதல்வராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் தெரிவாகியுள்ளார். பிரதி முதல்வராக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மீது பல ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கரன்னகொட விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் அசாப்தீன் மீது பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தற்போதைய அரசாங்கம் செயல்படுத்துமா? அதிகாரத்துக்காக பிரபாகரனுடனும் கூட்டணியமைத்துக் கொள்ளும் நிலைக்கு இந்த அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது- என்றார். (அ)

## ஜனாதிபதி நிதிய சேவை பரவலாக்கம் வடக்குக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்

### மாகாண ஆளுநர் என்.வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஜூன் 22

"ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் பிரதேச மட்டத்துக்கு பரவலாக்கப்பட்டமை எமது மாகாண மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இது முக்கியமான மைல்கல். இதற்காக எமது மாகாண மக்கள் சார்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்." - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை பிரதேச செயலக மட்டத்துக்கு விரிவாக்கும் நிகழ்சித் திட்டத்தின் வடக்கு மாகாணத்துக்கான ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீர்வள மேம்பாடு அமைச்சர் இ. சந்திரசேகரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன் வரவேற்புரையை நிகழ்த்தினார். தொடர்ந்து ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் தொடர்பில் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளரும், ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளருமான சி.றொஷான் தெளிவுபடுத்தினார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், நான் பிரதேச செயலராக பணியாற்றிய போர்க்காலத்தில் - 1991ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் - மக்கள் மருத்துவத் தேவைக்காக கொழும்புக்கு அலையவேண்டும். அதுவும் இதற்கு விண்ணப்பித்து நீண்ட காலம் காத்திருக்கவேண்டும். இந்த அலைச்சல் வீண் செலவுகள் எல்லாம் இப்போது இல்லாமலாக்கப்பட்டிருக்கின்றது. இது எமது மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம்.

அரச சேவை என்பது மக்களுக்கு விரைவாக கிடைக்கப்பெறவேண்டியது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அது மக்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது. மக்கள் தமது பிரதேச செயலகங்கள் ஊடாக விரைவாக தமக்குத் தேவையான நிதியை பெற்றுக்கொள்ள முடியும். தனித்து மருத்துவ தேவைக்காக மாத்திரமல்லாது, ஜனாதிபதி நிதியத்தின் ஏனைய சேவைகளையும் வடக்கு மாகாண மக்கள் இன்றிலிருந்து பிரதேச செயலகங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடியதாக அரச சேவையை மாற்றியமைக்கவேண்டும் என அதிமேதகு ஜனாதிபதி அடிக்கடி குறிப்பிடுவார். அது உண்மை. இன்று மக்கள் மத்தியில் அவ்வாறானதொரு நிலைமை இல்லை. இன்று ஆரம்பிக்கப்படும் இந்தச் சேவைகள் ஊடாக அதை மாற்றியமைப்பதற்கு அரச அதிகாரிகள் முன்வரவேண்டும்-என்றார்.

இதனைத்தொடந்து ஜனாதிபதி நிதியத்தினூடாக வழங்கப்படும் புலமைப்பரிசில் மற்றும் வேறு சேவைகளை இணைய வழிமுறையூடாக செயற்படுத்தும் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (அ)

## நாட்டை மாற்றுவதற்கு மக்கள் ஆதரவு அவசியம்

### பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, ஜூன் 22

நாட்டை மாற்றுவதற்கான பணிகளை அரசாங்கம் தனியாகச் செய்ய முடியாது. மாறாக அதனை மேற்கொள்ள ஒட்டுமொத்த நாட்டு மக்களின் ஆதரவும் அவசியம் என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜெய்சிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர் கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கான 2024 ஆம் ஆண்டு ஐந்தாம் வகுப்பு மாணவர் தேர்வில் தேர்ச்சி பெற்ற 201 மாணவர்களுக்கு உதவித்தொகை மற்றும் பரிசுகளை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்வி முறையை மாற்றுவதற்கு பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஜனவரி முதல், 1 ஆம் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்பு பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படும். ஒன்பதாம் வகுப்பிற்குப் பிறகு, மாணவர்களின் திறமைகள், அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், கல்விக்குத் தேவையான சூழலை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை தற்போது நிறுத்தப்படாது. மாறாக கல்வித்துறை மறுசீரமைப்பு இடம்பெறம் தருணத்திலேயே மாற்றம் ஏற்படுத்தப்படும். நாட்டை மாற்றுவதற்கான பணிகளை அரசாங்கம் தனியாகச் செய்ய முடியாது. மாறாக அதனை சாத்தியமாக பொது மக்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.